[illegible]

V 6 No. 21 25 May 1933

3L
m211, N28KN
N33·6·21
1[illegible]79

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 6 ] 1933 ௵ மே மீ 25உ [No. 21

JUL 1933

பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 401 |
| 2. | நம்மாழ்வார் வைபவர் (5-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. | 403 |
| 3. | தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் | 404 |
| 4. | அப்பர் (64 கலை-வியாகரணம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. | 406 |
| 5. | காற்று மழை (அங்கம் 1. களம் 2.) Shakespeare's Tempest | 407 |
| 6. | தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள் N. R. சேஷாசாரி | 408 |
| 7. | தமிழ்ப் பாடம் நளவெண்பா-கலிநீங்குகாண்டம் | 409 |
| 8. | பொதிகை நிகண்டு (ஞ, த, தா) S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. | 412 |
| 9. | திருக்குறள் நீதி (கற்பியல்) A. இராமலிங்கம் | 414 |
| 10. | ஞான தீபம் T. R. இராஜகோபால் | 415 |
| 11. | வர்த்தமானம் | 419 |

## கலாநிலயம்

### அரைக் கோழியும் முழுப் பிள்ளையும்.

18917

நயவஞ்சகம் மிகவுடைய சொற்களில் நாமுதல் வந்து வந்து வழங்க நிற்பது நாகரிகம் என்னும் இச்சொல். இதனை இடையிடையே மொழியாமல் சொற்பொழிவு நிகழ்த்துவா ரில்லை; அவர்களுள் அவ்வாசகத்தின் பொருளைச் செவ்விதின் தெரிந்து மொழிபவர் மிகமிகச் சிலர். கண்ணோட்டமுடைமையே நாகரிக மாகும் என்னுமவ் விலக்கணத்தை, ஏனையோர் மறப்பினும், "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என வள்ளுவர் வழங்கியுள மொழிக்கு உரியராய் நிற்கும் தமிழர் மறப்பது நன்றன்று. தமிழராய்ப் பிறந்த பேறு, வீறுடைய இவ்வாசகத்தின்வழி நிற்றலா லன்றோ விளங்குதல் வேண்டும். இதனை மறந்தால் இனி நினைப்பதற்கு வேறொன்றும் இல்லை; இதனை இழந்தால் இனி இவ்வாழ்க்கையில் வைப்பதற்கும் வேறொன் றுமில்லை.

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவதே நாகரிகமாயின், கால தேச வர்த்தமானங்களைச் சார்ந்து அது வேறுபடும் வகையில்லை. எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் எந்நிலையிலும் ஏற்கவல்லதொரு நிரந்தரமான செய்தியே கருணையுடன் கலந்த கண்ணோட்டமாதலின், தேசமும் காலமும் இதனை எவ்வாறு வேதித்துக் காட்ட இயலும். ஆயினும், ஆண் கல்வியென்றும் பெண் கல்வி என்றும் கல்விக்குப் பால் வகுத்ததுபோலவே மேனாட்டு நாகரிகம் என்றும் கீழ்நாட்டு நாகரிகம் என்றும் நாகரிகத்திற்குத் திசைகாட்டுகின்ற இவ்வேழைமையை என்னென்றுரைப்பது. மேனாட்டு நாகரிகத்தின் இலக்கணங்கள் இவை இவையென்றும், இந்தியா சைனா அனைய கீழ்நாட்டு நாகரிகத்தின் இலக்கணங்கள் இவையிவையென்றும், அதனினும் இதனினும் தள்ளற்குரியனவும் கொள்ளற்குரியனவும் சிற்சில உளவென்றும் கூறி, மானுடவளர்ச்சி சரித்திரத் தொடர்பு முதலியவைகளை ஆதாரமாகக் காட்டி, மேனாட்டு நாகரிகமும் கீழ்நாட்டு நாகரிகமும் ஒன்றுகூடிக் கலந்து பிறக்கப்போகின்ற ஒரு புதிய நாகரிகமே யாதினும் சிறந்ததாயமையும் என்று குறைவில்லாமற் செப்பிவருபவர் இக்காலம் எத்தனையோ பலர் எங்கும் இருக்கின்றனர். இவர்தாம், மனதிற்பட்டோ படாமலோ, இவ்விடயம்பற்றி மரபாகச் சொல்லிவருகின்ற சொற்கள் பெரும்பாலும் ஒருவகையதாயிருக்கும் மேனாடுகளில் நிலவுகின்ற நாகரிகத்தைப் பொருள் நாகரிகம் என்றும், கீழ்நாட்டுநாகரிகத்தைஆன்மநாகரிகம் என்றுங் கூறுவார். அதுபொருளைப்பற்றி உடலை வளர்த்து இம்மைக்குரிய நன்மைகளையே தொடர்ந்து நிற்குமாம். இது, இம்மையை வெறுத்து ஆன்மாவைச் சார்ந்துநிற்பதாம்; மேனாட்டு நாகரிகம் லோகாயதப் பான்மையதேனும், அதற்குரிய அதர்மம் அநீதி அகங்காரங்கள் கிடக்க, ஆள்வினை வினைத்திறம் முதலிய நற்குணங்கள் வாய்ந்ததாம். கீழ்நாட்டுநாகரிகமோ உலகப்பற்றின்றி அளவிறந்த ஆன்மநினைவில் ஆழ்ந்துஉழன்றமையால், சோம்பலும், செயலற்ற தாழ்மையும், வாழ்க்கைப் போரில் தோல்வியும் அடைந்து, ஆசையுடைய அயல்நாட்டவர்களுக்கெல்லாம் இரையாகிநிற்குமொருளெளிமை அடைந்ததாம். அவர் ஆன்மாவை விற்றுத் தம்மை வாங்கிக்கெடுகின்றனராம்; இவரோ தம்மை விற்று ஆன்மாவை வீணே வாங்கிக் கெட்டனராம். இரண்

டும்பிழையாம். இந்தியரைப்போல் ஆன்மநிலைவும் இருக்கவேண்டுமாம். மேனாட்டாரைப்போல் ஆள்வினையும் வேண்டுமாம். இவ்விருநாகரிகங்களும் கலப்பதால் இதனிற்சிறிது அதனிற்சிறிது சேர்ந்து ஆன்மநிலைவோடு ஆள்வினையும் வாய்ந்தவோர் நாகரிகப் புதுமகவு பிறக்கப் போகின்ற நாளை எதிர்பார்த்து நிற்கின்றோம் என்று புகலும் அப்பெரியார் என்ன நினைத்து என்ன சொல்லி அதற்காக என்னசெய்ய வேண்டுகின்றார்களோ அறிதலருமை. ஆன்மாவென்பது வித்தகத்தின் தத்துவம். கிரேக்கநாட்டு அறிஞர் ஸாக்ரடீஸ் கூறியவண்ணம், வித்தகம் ஒன்று உடையராயின், அவர்களுக்கு வேண்டுவன மற்றையவெல்லாம் தாமேவந்தடையும்; அவ்வாறு வராதவை அவர்களால் வேண்டப்படுவதில்லை. ஏதன்ஸ் நகரில் மிகப்பெரியவொரு பொருட்காட்சி (Exhibition) நடைபெற்றபோது, அதனைச் சென்று காண விரும்பாதிருந்த ஸாக்ரடீஸை அவரது நண்பர் சிலர் வலிந்து இழுத்துச்சென்று அவருக்குக் காட்டித் திரும்புகையில், ஸாக்ரடீஸை நோக்கி அந் நண்பர், "இப் பொருட்காட்சியைப் பற்றி நீர் யாது நினைக்கின்றீர்" என்று கேட்டதற்கு அவர் மெல்லச் சிறிது நகைத்து, "எனக்கு வேண்டாத பொருள்கள், அப்பா, எவ்வளவு இருக்கின்றன இவ்வுலகில்" எனப் பதிலுரைத்த மொழிகளை இன்று நினைவிற் கொள்ளவல்ல பாக்கியம் செய்திருப்பவர் முன்னுரைத்தபடி, நாகரிக மணம்முடித்து மருத்துவஞ் செய்யக் கைகளைநீட்டிக்கொண்டு நிற்கின்றோமென்று சொல்லமாட்டார். ஆன்மநிலையென்னில் ஆன்மநிலையேயொழிய வேறொன்று மதனிற் கலப்பதற் கியல்வதில்லை; அதன் தத்துவம் தூய்மைமாத்திரமன்றி முழுமையும் ஆகும். அதனில் ஒரு பாதி இம்மைக்கு உதவவும் மறுபாதி மறுமைக்கு உதவவும் முறைசெய்துகொள்வதென்பது பேதைமை. ஆன்மநிலைக்கு இம்மைச் சுகமென்றும் மறுமை இன்பமென்றும் வேறுபாடில்லை. இம்மையும் மறுமையும் கிடக்க, முக்காலமும் எண்திசையும் அனைத்துப் பொருள்களும் தோற்றமும் எல்லாம் ஆன்மநிலையினுள் அடங்கும். எனின், அதனை இருகூறுசெய்து ஒரு கூற்றை ஒன்றற்கும் மறுகூற்றை மற்றொன்றற்கும் உபயோகமாக்கிக்கொளல் என்பது பேதைமையின் பேராசையேயொழிய அறிவிற்குரிய முறைமையன்று. கோழியை அறுத்து ஒரு பாதி சமைத்துண்டு மறுபாதியை முட்டையிடுவதற்கென்று வைத்திருந்தானானால் அம்மடையனைப் பற்றி என்ன நினைப்போம். ஆன்மாவைச் சிறிது இம்மைக்கும் சிறிது மறுமைக்கும் ஆகும்படி சேதிப்பவர் அறிவும் அன்னதே.

இக்கொள்கையில் இன்னுமோர் ஆபத்தும் உளது. மேனாட்டு நாகரிகத்தினின்று கொள்ளத்தகாத கேடுகள் சிலவுளவென்றும், கீழ்நாட்டு நாகரிகத்தில் ஒழிய வேண்டிய தீமைகள் சிலவுளவென்றும் சாதித்து, முன்னதிலுள்ள நன்மைகளும் பின்னதிலுள்ள நன்மைகளும் மட்டுமே கொண்டு "பிறக்கப்போகின்றது பிறக்கப்போகின்றது ஓர் புது நாகரிகம்" என்று குடுகுடுப்பையாண்டிகளைப்போல் கூறிவருபவர் இதனால் நேரக்கூடிய விபரீதத் தோற்றங்களை ஏன் நினைப்பதில்லையோ அறிகிலேம். இந் நாகரிகக் குட்டி எவ்வாறமையுமோ, எக்குணங்கள் கொள்ளுமோ, எங்ஙனம் இயம்புவோம். மலடாய் முடிந்தாலும், கோவேறு கழுதை, கழுதையின் சாந்தமும் குதிரையின் உருவமும் கொண்டு பிறந்தது. இவ்வளவு பெருமையேனும் இப் பிள்ளைநாகரிகத்திற்கு வாய்க்குமென நிச்சயமாய் நினைப்பதற்கில்லையே. சிறிது நாட்களுக்கு முன்னர், ஆங்கில வம்பர் பர்னார்ட் ஷா என்பவரை ஓர் மாது சந்தித்து உரையாடிக்கொண்டிருக்கையில், இவள், தானும் ஏதேனும் சித்திரம் பேசவேண்டும் என்னுஞ் சிந்தையளாய், "ஐயா, இவ்வுலகிலெல்லாம் அறிவிற் சிறந்தவர் நீர், அழகிற் சிறந்தவள் நான்: நம்மிருவருக்கும் ஒரு மகவு பிறந்தால், நும் அறிவையும் என் அழகையுங் கொண்டு அது எத்துணைச் சிறந்ததாயிருக்கும்" என்று கூறுதலும் அவர், "மாதராய், என் அழகையும் உன் அறிவையுங் கொண்டு அம்மகவுதான் பிறந்துவிட்டால் என்னசெய்வதென்னும் அச்சமே என்னை உழக்குகின்றது" என்றுஎதிர்விளம்பிய பரிகசம் இந் நாரிகக் கலப்பினால் நேர்கின்ற விபரீதத்தை மிகவும் நன்றாக எடுத்துக் காட்டுகின்றது. இவ்விரண்டு நாகரிகங்களிலும் உளவென்று தனித்தனி கூறப்பெறுகின்ற குறைகளையும் ஒன்றாகக் கொண்டு இப்புதிய நாகரிகம் தோன்றிவருகின்றதென்றுணர்வதற்குப்போதிய குறிகள் இப்பொழுதே இருக்கின்றனவே.

வாழ்க்கையேயாகுக, வாழ்க்கைக்கு வழியாய வாய்மையேயாகுக; முழுமையாய் நிற்கின்றவொன்றை, அரைக்கோழி சமைத்த அம்மடையனைப்போல் பிரித்து விவகரித்தாலும், சித்திரம் பேசிய இம்மாதினைப்போல் கலந்துவைக்க முயன்றாலும் விளைவதனைத்தும் விபரீதமேயாகுமென்பதற்கையமில்லை. ஆதலின் இப்படிப் பேசுவது அறியாமையாவதுடன் அவலங்களத்தனைக்கும் ஆதாரமுமாகின்றது; இன்ன இனத்தவர்களைச் சும்மாவிருக்கும்படி செய்வதற்கு ஒரு வழி ஓதாயோ இறைவா, என்று ஏங்காநிற்கும் உத்தமர் தம் நெஞ்சம்.

நாகரிகம் என்பது கருணையே என்றபின், மனிதர் நாகரிகம் அடைவதற்குக் 'கருணையுடையவராதல்' என்பதன்றி வேறு பொருள் இல்லைபே. இந்தியர், கருணையை வேறொன்றாக வைக்காமல், கருணையே கடமை என்று சிந்தித்த செம்மையரா யிருந்தனர். ஆதலின் இது, 'தர்மம்' என்ற கருத்தினோடு ஒன்று சேர்ந்து நிற்கின்றது. இன்னணம் கடமையே கருணையாய், கருணையே கடமையாய், ஒன்றிவாழும் நாகரிக வாழ்க்கைக்கு ஒருவனை உடன்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிப் பார்க்குங்கால், "நீ கருணையுடையவனாய் இரு இரு" என்று உபதேசங்களும் பிரசாரங்களும் பரக்கச் செய்வதனால் பயன் ஒன்றுமில்லை என்பது அறிவுடையோர் அனைவர்க்கும் முதலில் புலப்படாமல் தீராது. வேறெக்குறைகள் இருப்பினும் இல்லா தொழியினும், இவ்வுலகில், உழைத்துழைத்து உபதேசங்கள் செய்பவர் தொகை ஒருபோதுங் குறைந்ததில்லை. மற்று, அன்பின் வளர்ச்சியோ காணாமையுடன் இயற்கையாயிருந்த சிறிது அன்பும் அழிந்துகொண்டுவருகின்ற கோலமே எம்மருங்குங் காண்கின்றோம். வேரூன்றி வளர்வதற்குரியதாய் இதயத்தைப் பண்செய்த பின்னன்றே அன்பெனும் வித்தை அதனில் இடுவதற்கு நினைத்தல் வேண்டும். கலைகளே இதயத்தைப் பதம் செய்யும். கலைகளினும், கையருகு நின்ற எத்திறத்தினோர்க்கும் செவ்விநோக்கி உதவுமொரு நீர்மை வாய்ந்தது காவியக்கலை. இதனைக் கைகடக்க விட்டுவிட்டுக் கட்டுரைப்பதென்கொலோ! ஆதலாற்றான் நம் "கலா நிலயம்" கலைகளே கதியென்னுங் கருத்துடன் நிலவுகின்றதென்பதை நம் நண்பர்கள் அறியாதிரார்.

**விரைவில் நேராகும் என நம்பி, பத்திரிகை [illegible] காலங்கடந்து வருவதை நமது நண்பர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று [illegible]** **"மானேஜர்"**



# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

5-ம் பத்து 1-ம் தசகம்

[393-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம். பாசுரம்.

அம்மா னாழிப்பிரா னவனெவ்
விடத்தான் யானார்
எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று
வாய்க்குங் கண்டீர்
கைம்மா துன்பொழித் தாயென்று
கைதலை பூசலிட்டே
மெய்ம்மா லாயொழிந்தே னெம்பிரானு
மென்மே லானே.

**உரை:**—அம்மான் - எல்லாருக்கும் தலைவனும், ஆழிப்பிரான் - திரு ஆழிப்படையைக் கையில் ஏந்தியவனும் ஆகிய, அவன் - அப்பெருமான், எவ் விடத்தான் - எவ்விடத்தில் இருப்பவன், யான் ஆர் - நான் யார்? (அவனுக்கும் எனக்கும் எவ்வளவு தூரம் இருக்கின்றது என்று உரைத்தபடி; அவ்வாறு இருந்தும்). எம் - எம்மைப்போன்ற, மா பாவியர்க்கும் - பெரிய பாவிகளுக்கும், விதிவாய்க்கின்று - விதியின் வாயிலேயே அகப்பட்டு நசிப்பது இன்றி, வாய்க்கும் - நற்கதி வாய்த்தலும் கூடும், கண்டீர் - தெரிந்துகொள்ளுங்கள். கைம் மா - துதிக்கையையுடைய கஜேந்திர ஆழ்வாருடைய, துன்பு ஒழித்தாய் - துன்பத்தை நீக்கினவனே, என்று - என்று, கை தலை பூசல் இட்டு - கைகளைத் தலைமேல் மோதி மோதி அழைத்தே, மெய் - மெய்யாகவே, [illegible] ஒழிந்தேன் - பக்திப்பரவசமானவனாக முடிந்தேன். ([illegible]னே) எம்பிரானும் - என்பெருமானும், என் மேலான் - என்மேல் சேர்ந்து என்னைக் கூடி எனக்குத் தலைவன் ஆனான்.

---

8-ம் பாசுரம்.

மேலாத் தேவர்களும் நிலத்தேவரும்
மேவித் தொழும்
மாலார் வந்தின்நா ளடியேன்
மனத்தே மன்னினார்
சேலேய் கண்ணிய ரும்பெருஞ்
செல்வமும் நன்மக்களும்
மேலாத் தாய்தந்தையு மவரே
யினியா வாரே.

**உரை:**—மேலாத் தேவர்களும் - மேலுலகத்தில் இருக்கின்ற தேவர்களும், நிலத்தேவரும் - பூமியில் இருக்கின்ற தேவர்களாகிய அந்தணர்களும், தொழும் - வணங்குகின்ற, மாலார் - திருமாலானவர், வந்து - வந்து, இந்நாள் - இப்பொழுது, அடியேன் மனத்தே மன்னினார். அடியேனாகிய என்னுடைய மனத்திலே தங்கினார், இனி - இதன் மேல், சேலேய் கண்ணியரும் - சேல்மீன் போன்ற கண்களையுடைய மாதர்களும், பெரும் செல்வமும் - பெரிய செல்வமும், நல் மக்களும் - நல்ல மக்களும், மேலாத் தாய் தந்தையரும் - சிறந்த தாய் தந்தையர்களும், [illegible] ஆவார் - அவரே எனக்கு ஆவார்.

---

9-ம் பாசுரம்

ஆவாரார் துணையென் றலைநீர்க் கடலு ளழுந்தும்
நாவாய்போல் பிறவிக்கடலு ணின்று நான்துளங்கத்
தேவார் கோலத்தோடு திருச்சக்கரம் சங்கி னோடும்
ஆவா வென்றருள் செய்தடியே னோடு மானானே.

**உரை:**—ஆர் துணை ஆவார் என்று - என்னுடைய ஆபத்தான நிலையிலே யார் சிநேகிதர்போல் துணை நிற்பாரென்று, பிறவிக்கடலுள் - தேஹம் போய் ஸம்ஸரித்து மறுபிறப்பு எய்தி இடைவீடின்றிச் சம்சாரக் கடலுள் அழுந்திக்கிடக்கின்ற யான், நின்று - கரை ஏறத்தெரியாமல், துளங்க - திகைக்க, நீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்போல் - சமுத்திரத்தில் முழுகிப்போகவிருக்கும் கப்பலில் உள்ளாரைப்போல் நிர்க்கதியாயிருக்க, தேவு ஆர் - தேஜஸ்ஸு பொருந்திய கோலத்தோடு தனக்கு அஸாதாரணமான திருவடிவுடனே, திருச்சக்கரம் சங்கினோடும் - தன் திவ்விய சோபையுள்ள ஆயுதங்களோடு (இங்கு ௸ ஆயுதங்களின் மூர்த்திமான்களாகிய திருவாழியாழ்வாருடனும் திருச்சங்காழ்வாருடனும் எவ்வண்ணம் பிரீதியுடன் கலந்து அநுபவிக்கிறானோ அவ்வண்ணம் அது,) ஆவென்று - சந்தோஷத்துடன், அருள்செய்து - எனக்குக் கிருபை செய்து, அடியேனோடும் - என்னோடும், ஆனான் - கலவை செய்தான். சக்கரத்தாழ்வார் திருச்சங்காழ்வார் உள்படத் திவ்வியசோபையோடு என்னோடு கலந்தான். அவர்களோடு கலக்கையிலும் இந்த விசேஷம் உண்டாயது ஸ்வத்வஸித்தம்.

**குறிப்பு:**—ஆ ஆவென்று—சாந்தோக்கிய உபநிஷத்தில் "ஹா~வா" "ஹா~வா" வென்று முக்தர்களை பகவான் ஏற்கின்றானென்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது—"ஹா~வா" சந்தோஷத் தொனி.

---

10-ம் பாசுரம்.

ஆனாளுடையானென் றஃதேகொண்டுகந்துவந்து
தானேயின்னருள்செய்தென்னை முற்றவுந்தானானான்
மீனாயாமையுமாய்நரசிங்கமுமாய்க்குறளாய்க்
கானாரேனமு மாய்க்கற்கியாமின்னங்கார்வண்ணனே.

பதக் குறிப்புக்கள்:—கானாரேனமுமாய் - கான் + ஆர் + ஏனமும் ஆய் - காட்டில் சஞ்சரிக்கிற வராஹமும் ஆய், கற்கியாம் இன்னம் - இன்னமும் கல்க்கி (குதிரை வடிவு) அவதாரம் எடுக்க வேண்டிய, கார்வண்ணன் - மேகம் போன்ற காந்தியுள்ளவன், ஆனாளுடையான் - யான் அவனுக்குத் தாஸவிருத்தியிலமைந்த நிமித்தம் பற்றியே, அஃதே கொண்டு - இந்த ஒரு காரணம் மாத்திரமே கொண்டு - அதாவது யாதொரு விசேஷ காரணமின்றித் தனது ஸஹஜ கிருபையால், இன்னருள் செய்து - மிகவும் கிருபை செய்து, என்னோடு ஆனான் - என் பக்கல் மிகவும் சிநேகத்தால் இதற்குமுன் என்னுடன் கலவாதவன்போலே நான் வேறு தான் வேறு என்று காணப்படாத வண்ணமாய் ஒன்று சேர்ந்தான். மீனாய் - பகவான் இதற்கு முன்பு தான் செய்தருளிய மத்ஸியாவதாரம் முதலியவைகளையும் இனித் தான் எடுக்கப்போகிற கற்கியவதாரத்தையும் என் பொருட்டுத் திரும்பவும் செய்ய என் பக்கலிலுள்ள ஆதரவினால் என் வேண்டு

கோளே அபேக்ஷித்திருந்தான், இதென்ன ஆச்சரியமான கிருபா பரவசம், வெகு இலேசான முயற்சிக்கு என்ன பெரும் பேறு!!!

---

11-ம் பாசுரம்.

கார்வண்ணன் கண்ணபிரான் கமலத்
    தடங்கண்ணன் றன்னை
ஏர்வள வொண்கழனிக் குருகூர்ச்
    சடகோபன் சொன்ன
சீர்வண்ண வொண்டமிழ்க ளிவையா
    யிரத்துளிப் பத்தும்
ஆர்வண்ணத் தாலுரைப்பா ரடிக்கீழ்ப்
    புகுவார் பொலிந்தே.

குறிப்புக்கள்:—இங்குக் கண்ணபிரானை யெடுத்தது-ஆச்ரித சுலபனென்று காட்ட. ஆர் வண்ணத்தால் உரைப்பார் - ரஸமாய்ச் சந்தத்தோடு உரைப்பவர், பொலிந்து - பெருமைப்பட்டு, அதாவது ஸ்ரீவைஷ்ணவ சம்பத்து ஸமர்த்தியுடன், அதாவது பகவானது சொத்தாயிருப்பதொன்றே தமக்கு உத்தம புருஷார்த்தமென்று நினைத்துத் திருப்தியடைவார். அடிபுகுவார் - பகவத் சரணாரவிந்தத்தில் சேர்வார்கள்.

விசேஷக் குறிப்பு:—பகவான் அத்தியந்தம் கருணைமூர்த்தியென்றும், யாதேனும் ஒரு சிலரை வியாஜம் கொண்டு அடுக்குமவர்களைப் பக்தனாக ஏற்பவனென்றும், அவன் கிருபா பரவசனென்றும், தன்னை இப்படியே அந்தரங்க பக்தனாக ஆக்கினானென்றும் ஆழ்வார் இந்தத் தசகத்தில் அருளிச் செய்கின்றார். ஒருவன் தன்னிடத்தில் வைத்த மந்த விசுவாஸத்தை உண்மையான பூர்ண பக்தியாக ஆக்க வல்லவன் பகவான் என்பதை முதல் பாசுரத்திலேயே உரையுள் கூறியுள்ளோம்.

---

# தேவகி

## அத்தியாயம் 12.

[388-வது பக்கத் தொடர்ச்சி]

இனி என்ன செய்வதென்பதே எனது சிந்தனையாயிற்று. செய்வதுதான் தெரியவில்லை. அன்றிரவே சித்தூர்சென்று ஜயரங்கனைக் காணவேண்டுமென்று என் உள்ளம் துடித்தது. சிற்றப்பனுக்கு என்னைத் தெரிவித்துக்கொண்டு அவரது சம்மதிபெற்றுச் சித்தூர் செல்வதா அல்லது யாருமறியாமல் இரவே அகன்றுவிடுவதா என்று பலவாறு எண்ணினேன். இன்னவாறு நான் சிந்தித்துக்கொண்டிருக்கையில் என்னருமைச் சிற்றப்பன் என்னறைவந்து, “குழந்தாய், இன்றிரவே நானொரு வேலையாய் அயலூர் செல்ல நினைக்கின்றேன். இரண்டு தினங்களுக்குள் திரும்புவேன்” என்று சொல்லி யகன்றார். எல்லாம் நன்மைக்கேஆகின்றது, என்று தேறினேன். உண்டபிறகு சிற்றப்பனும் வந்தவரொடு வெளிச்சென்றார். நானும் என் விதியிழுக்க ஒருவரும் அறியாவண்ணம் அன்றிரவே புறப்பட்டேன்.

நடந்தேன், நடந்தேன், இரவெல்லாம் பேயென நடந்தேன். பொழுதும் விடிந்தது. பசியும் களைப்பும் என்னைவிட்டகன்றன. கதிரவனும் என்பால் அவன் வெம்மையைச் செலுத்தமுடியவில்லை. பகல் முழுதும் நடந்தேன். நடந்த நான் மாலையில் சித்தூரையெய்தினேன். சித்தூரை யெய்தியதும் என் உள்ளத்தில் உவகை பெருகப் பெருக என் நடையும் தளர்வுற்றது. மெல்ல நடந்து மாளிகையை எய்தினேன். பாழடைந்து[illegible] அம்மாளிகையினுள்புகுந்தேன். ஜயரங்கர் அங்கு எங்கும் அகப்படவில்லை. தோட்டமெல்லாம் நடந்தேன். சிறிது தூரத்திற்கப்பால் தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்த ஆலமரத்தடியினில் ஆட்களின் நடமாட்டம் இருக்கக்கண்டு அங்குச் சென்றேன். அங்கோர் குடிசை அமைக்கப்பெற்றிருந்தது. குடிசைக்கு எதிரில் உள்ளவோர் மரத்தடியில் அமைத்திருந்த மேடையொன்றில் என் ஜயரங்கர் வீற்றிருந்தார். மௌனமாய் வீற்றிருந்தவர் துண்ணென வெழுந்து கைக்கோலின் துணைகொண்டு தள்ளாடித்தள்ளாடிச் சிறிது நடந்தார். மீண்டும் மேடைக்கருகுவந்து அதனில் அமர்ந்துகொண்டார். தமது இருகைகளினாலும் தமது தலையை இறுகப்பற்றினார். மருண்டு விழித்தார், நெடிதே உயிர்த்துப் பற்பல சொல்லிப் புலம்பினார்:—

“அடி நங்காய், பொன்னிழந்தேன், மண்ணிழந்தேன். எனினும் வருந்தவில்லை. வன்னெஞ்சப் புல்லியோர்தம் சூழ்ச்சியினால் பரிபவமும் நான் மிகப் பெற்றேன். இன்னும் தவணைக்காரர் புரிவதற் கிருப்பவைகளுக்கும் நான் அஞ்சவில்லை. என்னைப்பயந்து புரந்த என்னருமை அன்னையும் இறந்துபட்டாள். [illegible]ஞெரு மகளின் உடல்நிலையும் நானறியேன். இன்[illegible]படி வாடுமென்னை நீயும் அடிபெண்ணே துறந்தகன்றாய்; இது உன் மதியோ அல்லது என் விதிதானோ அறியேன்.”

‘பெண்ணே தேவகி, வாடுகின்றேன். நீ யுறையுமிடம் தெரியவில்லை. என்பொருட்டுப் பெண்பாலார் தம் கருணையெல்லாம் உகுத்தனரோ” என்று கூறி விம்மினார், வெய்துயிர்த்தார். சிலநேரம் பேசாதிருந்தார். பின்னெழுந்தவர் ஏதோ நினைத்து உடல்குலுங்கினார். மீண்டும் அமர்ந்தார். அமர்ந்தவர் மீண்டும் கூறினார்:—

“என் செய்வேன் அடி பெண்ணே, வஞ்சனையே நீ புரிந்தாய். என் வாழ்விற்கே காரணமாய், என்னுயிரின் நற்காப்பாய் என் நல்வினையுமாய் என் வீடு புகுந்தாய்என்று எண்ணினேன். உன்னுறவும்துணைநலமும் நான் பெற்றால் என் துயரமெலாம் அகன்றுவிடும் என்று எண்ணி இந்நாள் உயிர்வாழ்ந்தேன். ஆனால்அடி பெண்ணே நீ என்னை வஞ்சித்தே சென்றுவிட்டாய்.

“சொன்சொற் கருதாமல் என்னை நீ துறந்தனையே. வன்னெஞ்சப் புல்லியரும் தவணைக்கடைக்காரர்களும் சூழ்ந்து செய்த சதியும் என்னை வருத்தவில்லை. உன் செயல் என்னைக் கொல்லாமல் கொன்று தின்கின்றது. என் செய்வேன். என் உயிரும் தொலைவதில்லை.

“சொன்ன சொல் தவறி நீ என்னை மறந்தாய்.என்னை நீ துறந்தாலும் நானுன்னை மறக்கமாட்டேன். நீ தந்த முறுவலும், குயிலொலியும், வஞ்சனையின் போர்வையோ ஆகவேண்டும். மெய்யென்று மகிழ்ந்தேன். இனி உலகத்தை வெறுத்துவிட்டேன். பொன்னும் பெண்ணும் துறந்துவிட்டேன். ஏ கடவுளே, உன்னையே நம்பினேன், உன்னருளையே விரும்புகின்றேன். என்னை யேற்பாய்”

என்றென்று என் வள்ளல் ஜயரங்கன் வருந்திக்கொண்டிருக்க வானம் இருண்டது. இருண்ட வானத்தை மழைத்துளியும் தொடர்ந்தது. அவர் அருகு சென்றேன். அவர் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. “ஐய, வானம் மழை தூவுகின்றது, எனவே உள்ளே செல்லுங்கள். நானழைத்துச் செல்கின்றேன்.” என்று கூறினேன்.

என்மொழி கேட்டதும் அவர் திகைத்துவிட்டார். என் பக்கல் திரும்பினார். “என் தேவகியின் குரல் வழங்கும் பண்ணெல்லாம் கவர்ந்திசைக்கும் பெண்ணே, நீ யார். எம் மகனை வஞ்சித்து இங்கு நீ வந்தனையோ,” என்று கூறிக்கொண்டே என் தோளின் துணை பற்றிக் குடிசையினுட்சென்றடைந்தார். சென்றவர் இருக்கையொன்றில் அமர்ந்து, என்னை உற்றுநோக்கி, “நீ தேவகியாகவோ, அல்லது அவளது ஆவியாகவோ இருக்கவேண்டும். அல்லது என் கனவுதானோ” என்று அவர் வியப்புடன் கூறிக்கொள்ள, நான், “ஐய, தேவகிதான், வந்துவிட்டேன். தேவகியும் உங்களை வஞ்சிப்பாளோ” என்று கூறினேன்.

“என் செல்வமே...” என்றவர் என்னையழைத்து எழ முயன்றவர் மூர்ச்சையாய் இருக்கையில் சாய்ந்துவிட்டார். மூர்ச்சை தெளிவதற்கு ஆவன செய்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் மூர்ச்சை தெளியக் கண்விழித்தார். விழித்தவர் என்னை அளப்பரிய ஆர்வமுடன் அணைத்துக்கொண்டார். நானுற்ற களிப்பினிற்கு இணையொன்று தேவருலகத்திலும் இருந்திராது. ஜயரங்கபூபதி சிறிதுபொழுதுமௌனமாயிருந்தவர், அணைத்திருந்த கைகளை அகற்றிக்கொண்டு, எழுந்திருந்து, “பெண்ணே, என்னை வஞ்சித்துச் சென்றனையே. போதுமோ உனக்கு” என்று கேட்டார்.

“பெரியோய். நான் யாரையும் வஞ்சித்ததில்லை. பழக்கமில்லா வொன்றை உங்கள்பால் புரிவது இயன்றதொன்றன்று.”

“சொல்லாமல் நானறியாமல் சென்றனையே. கண்ணே, பெண்மைக்கிது அழகோ!”

“பெண்மையின் இலக்கணம் நான் அறியேன். நான் பிரிந்தகல வேண்டுமென்பது தெய்வத்திருவுள்ளமாயின் அதைத் தடுப்பதும் இயலுமோ. தெய்வமே இழுத்துச்செல்ல, அவ்வழிப் படர்ந்தேன். இப்பொழுது வந்துவிட்டேன், ஏற்றருள்வீர்.”

“நல்லது, பெண்ணே, மணந்தனையோ உனக்குகந்த ஒரு நன்மகனை.”

“ஐயனே, சோற்றிற்கு வழியில்லா ஒரு அநாதையை மணப்பதற்கு ஒருவன் உளனோ.”

“இங்கு ஏன் இன்று வந்தாய். படிப்பதற்கு என் மகளுமில்லை. கொடுப்பதற்கு என்னிடம் பணமுமில்லை.”

“பொருள் விழைந்து வந்தேனில்லை. உங்கள் திருமகனின் நற்றுணையாய், உங்களது பணியாளாய், இங்கிருந்து தொண்டுசெய்ய இன்று நான் வந்துள்ளேன். வள்ளலே வழங்குவாயோ இவ்வரத்தை.”

“மீண்டுமென்னைவிட்டு அகல்வாயோ”

அகல்வதற்கு நான் இங்கு வரவில்லை. இரவெல்லாம் பகலெல்லாம் வழிநடந்து வந்ததும் உன் பணியேற்று வாழவே.”

“மணம் ஆகவில்லை—ஏன்”

“மணந்துகொண்டால் உங்கள்பால் என் கடன் ஆற்ற இயலுமோ”

“இனி என்னைவிட் டகலமாட்டாயே”

“ஐய, அகலமாட்டேன்.”

“நன்று, மனையிழந்தேன், பொருளிழந்தேன். என் ஜமீனையும் இழக்க நேரலாம். காலின் வலியிழந்தேன், கண்ணொளியும் இழந்துவருகின்றேன். ஏழையாய், விட்டேன். என்பால் நீ...” என்றவர் முடிக்குமுன்னம் “நான் இரப்பதும் இது. என்னை யேற்றருள்வீர்” என்று நான் கூறினேன்.

சிறிது நேரம் மௌனமாய் இருந்த அவர், “மணங்கொள்ளப் போகின்றனையோ” என்று கேட்டார். “ஆம்” என்றேன்.

‘யாரை’ என விரைந்து கேட்டார்; “அன்றொரு நாள் ஜயரங்கபூபதியார் மனைபோந்த சோதிடக் கள்வனை” என்றேன்.

“இன்னுமா, பெண்ணே”

“இன்னுந்தான், இனியெனக்குள பிறவியெல்லாம் அச் சோதிடவல்லானைத்தான்.”

என்று நான் கூறலும், என்னை யவர் ஆர்வமுடன் இருகையாலும் அணைத்துக்கொள்ள இருவேமும் ஒருவேமாய் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் மறைந்து, இவ்வுலகையும் மறந்துவிட்டோம்.

இந்த நிலையில் வண்டியின் அரவம் ஒன்று எமது மோனத்தைக் கலைத்தது. கதுமென அவர் கைவிலக்கி வெளிவந்தேன். வருங்கால் எல்லாம் வருமென்பது மெய்யாமாறு என்னருமை இராணி வரக்கண்டேன். வந்த சிறுமியை என்கை யேற்று உள் சென்றேன். நானும் என் அண்ணலாரும் இராணியை மாறிமாறித்தழுவி எமது முத்தத்தால் அவள் மேனியெல்லாம்கனியச்செய்தோம். இன்னபடி இன்பக்கடலாடிக்கொண்டிருக்கும்வேளை என் சிற்றப்பனும், அன்று என் சிற்றப்பன் மனைவந்த பெரியாரும் அங்குவந்து சேர்ந்தனர். வந்தவர் என்னை இங்குக் கண்டு வியந்து நிற்க, “என் தந்தையே, நான்தான் உங்கள் அருமை மகள் தேவகி, ஏற்றருள்வீர்” என்று கூறி அவர் திருவடியில் விழுந்தழுதேன். என்னைப் பெற என் சிற்றப்பன் மிக மகிழ்ந்தார். இழக்க விருந்த ஜமீனையும் என் சிற்றப்பன் மீட்டுத் தந்தார். என் அண்ணலும் கண்ணொளி பெற்றார். சோதிடர் மொழிந்த ஒரு நற்றினத்தில் எனக்குத் திருமணம் செய்வித்து, எனக்கும், ஜயரங்கபூபதிக்கும் அப்பனுமாய், என் இராணிக்குப்பாட்டனுமாய் எங்களுடன் நீண்டநாள் இனிது வாழ்ந்துவந்தார் என் சிற்றப்பன். அப்பனது ஆசியினில் நாங்களும் நனி தழைத்தோம்.

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

முற்றிற்று.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[364-வது பக்கத் தொடர்ச்சி]

(x) அப்பரும் 'நும்' என்னும் பெயரும்

'நும்' என்பது இக்கால வழக்கத்தில் மறைந்து வருகின்றதோர் முன்னிலைப் பெயராம். "நீயிர்" என்பது இதன் திரிபு.விளிமரபில், தொல்காப்பியனார் விளிகொள்ளப் பெயர்களைக் கூறுமிடத்து,

"நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை யிரண்டு மவற்றியல் பியலும்" என்பார்
(தொல் - சொல்லதிகாரம் - 143)

'நும்' என்பதன் இயற்கையைத் தொல்காப்பிய உருபியலில் காணலாம். 'நும்' என்பது முதல் வேற்றுமை. இது விளியொழிய ஏனைய ஆறு வேற்றுமைகளையும் ஏற்கும்.

"நும்மென் னிறுதி யியற்கை யாகும்
(தொல் - உருபியல் 15)

என்னும் சூத்திரத்திற்கு, நச்சினார்க்கினியர் உரையைக் கவனிக்கவும்.மகரவீற்றுப்பெயர்கள் ("உரும்" முதலியன) இன் முதலிய சாரியைகளைப் பெற்றுவேற்றுமை ஏற்பது போல் 'நும்' என்பதற்குச் சாரியை வாராதென்றும் 'நும்மை,' 'நும்மொடு' 'நுமக்கு', 'நும்மின்,' 'நுமது, 'நுங்கண்' என வருமெனவும் உதாரணம் காட்டுகின்றார். அவற்றின் பிரயோகத்தை வெளிப்படையிலும் குறிப்பிலும் பின்வரும் அப்பர் பாசுரங்களில் காண்க:

துன்ப நும்மைத் தொழாத நாள்களென் பாரும்
இன்ப நும்மை யேத்து நாள்க ளென்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே யென்பாரும்
அன்ப னூரூர் ஆதிரை நாளாலது வண்ணம்.
திருவாரூர் - திருவாதிரைத் திருப்பதிகம் 9.

மற்றும்,

கொன்றை சூடியைக் குன்ற மகளொடு
நின்ற நீலக் குடியர னேயெனீர்
என்றும் வாழ்வுகந் தேயிறு மாக்குநீர்
பொன்றும் போது நுமக்கறி வொண்ணுமோ.
திருநீலக்குடி - திருக்குறுந்தொகை 6.

என்னும் பாசுரத்தில் 'நுமக்கு' என்பதின் பிரயோகம் காண்க.

நுமக்கு என்னும் 4-ம் வேற்றுமையிலும், நுமது என்னும் ஆறும் வேற்றுமையிலும், தனிக்குறிலின் முன் வந்த மெய் இரட்டுவதில்லை. இதன் விதி

ஆறு* னுருபினு நான்க னுருபினும்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை
யீறுகு புள்ளி யகரமொடு நிலையு
நெடுமுதல் குறுகு மொழிமுன் னன.
(தொல் - தொகை மரபு 19)

"நும்மெ னிறுதியு மந்நிலை திரியாது"
(ஷை 20)

என்பவற்றை நோக்குக.

நும்மென்பது வேற்றுமை அல்வழிச் சந்திகளில் எவ்வாறாகுமென்பதைப் பின்வரும் சூத்திரங்களால் அறிக:—

"நும்மென் னொருபெயர் மெல்லெழுத்து மிகுமே"
(தொல் - புள்ளிமயங்கியல் 29)

அல்லதன் மருங்கிற் செல்லுங் காலை
யுக்கெட நின்ற மெய்வயி னீவர
இயிடை நிலைஇ யீறுகெட ரகர
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
யப்பான் மொழிவயி னியற்கை யாகும்.
(ஷை 30)

நும் என்பது மாறுவது 'நீயிர்' என்னும் உருவமாம். நும்மென்பது 'நுங்கள்' என்று பன்மையில் வருவதுமுண்டு.

இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவீரு முலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
யமரர்கடம் பெருமானை யரனை யாரூர்
உடையானைக் கடுகச்சென் றடைவே னும்மால்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே.
திருவாரூர்—திருத்தாண்டகம்.

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமும் போதாதே!—"
ஷை 4.

எனவே நும் என்பது முன்னிலை ஒருமைப்பெயராயினும் பன்மைபோல் ("ஒருவர்" என்னும் கிளவி போய்) பயன்பட்டு, அறுவகை வேற்றுமையுருபு ஏற்று, நுங்கள் என்னும் பன்மையும் பெற்று வழங்குமென்பது அப்பர் தேவாரத்தால் உணரலாம்.

மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண்! முழுதுமிவ் வுவகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்மரானை
நடாத்து கின்றீர்க் கமையாதே..."
திருவாரூர் - திருத்தாண்டகம் 9.

* "அது" என்பதொன்றே ஆறும் வேற்றுமை யுருபாகத் தொல்காப்பியனார் எடுத்துக்காட்டுகின்றார். சொல்லதிகாரம் (வேற்றுமையியல்) 79-ம் சூத்திரம் நோக்குக. ஆகையால் 'உடைய' என்னும் சொல் வருங்கால் "நும்" இரட்டும். (உ - ம்):—

**அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.**



# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[395-வது பக்கத் தொடர்ச்சி]

**ப்ராஸ்ப்பீரோ:**—[பர்டினண்டைப் பார்த்து] என் பின்னே வா—[மிராண்டாவைப் பார்த்து] இவனுக்குப் பரிந்து நீ பேசவேண்டா. இவன் ஓர் இரண்டகன்—[பர்டினண்டிற்கு], வா, உன் கால்களையும் கழுத்தையுஞ் சேர்த்துச் சங்கிலியாற் கட்டிவைப்பேன்: கடல் நீரே நீ குடிப்பாய்; நன்னீரோடை நத்தைகளும், உலர்ந்துதிர்ந்த வேர்களும், வித்துக்கள் தொட்டில்கொண்டிருந்த உமிகளுமே உன் உணவுகளாகும். (1)

**டர்டினண்ட்:**—ஆகா (2.) என் மாற்றலன தாற்றலே அதிகமென் றாகும்வரை, இவ்வகை உபசாரத்தை யான் தடுத்தெதிர்ப்பேன்.(3)

[பர்டினண்ட் வாளை உருவுகின்றான். ஆயினும் ப்ராஸ்ப்பீரோவின் மந்திரத்தால் கட்டுண்டு அசையமாட்டாமல் நிற்கின்றான்.]

**மிராண்டா:**—ஐயகோ, அருமைத் தந்தாய், ஆராயாதிவனை நீ அளவிறந்து சோதிக்கவேண்டா (4) அருங்குணச் செம்மல் இவன் வெருவந்த செய்யான் (5).

**ப்ராஸ்ப்பீரோ:**—(மிராண்டாவைப் பார்த்து) என்ன, என்ன விது! என் அடியா எனக்கு ஆசிரியன்! (6)—[பர்டினண்டைப் பார்த்து] இரண்டகக் கள்வ, உன் வாளினை உறையிலிடு. ஓங்குகின்றாயன்றி ஒறுக்கத் துணிகின்றாயலை (7). உன் மனச்சாக்ஷியில் அத்துணைக் குற்றங் குடிகொண்டிருக்கின்றது. (8) தற்காத்து நீ நிற்கும் நிலையினின்று நீங்கி வா. இங்கு இக் குச்சியால் நீ நிராயுதனாக உன் கட்கம் கழன்று கீழேவிழும்படி என்னாற் செய்யஇயலும். (9)

**மிராண்டா.**—எந்தாய், உன்னை யான் இரந்து வேண்டுகின்றேன்.

**ப்ராஸ்ப்பீரோ:**—போ அப்பால், என் அங்கியின் மீது தொங்கா தொழி:

**மிராண்டா:**—ஐய, இவன்பாற் கருணை வை. நானே இவனுக்குப் பணையமாவேன். (10)

**ப்ராஸ்ப்பீரோ:**—சும்மாவிரு! இன்னுமொரு வார்த்தை, உன்னை யான் வெறுக்கவைக்காதொழியின், வைது அகற்றும்படி செய்யும்(11).என்னிது, வஞ்சகன் சார்பு வாதிக்க வந்தனையோ! வாயை மூடு! இவனையும் காலிபனையும் மாத்திரமே பார்த்திருக்கின்றாயாதலின், இவனனைய வடிவங்கள் வேறு இல்லையென் றெண்ணுகின்றாய் நீ. பெண்ணே, பேதாய், மனிதரிற் பெரும்பாலோர்க் கிதுவோர் காலிபனே; இவனுக்கு அவர்தாம் வானவர்கள் போலாவார். (12)

**[மி]ராண்டா:**—எனின், அதிகமும் அடக்கமுடையதெனதாசை. இவனினும் நன்னலத் தொருவனைக் காணவேண்டுமென்னும் நசையோ எனக்கில்லை.

**[ப்]ராஸ்ப் பீரோ.**—[பர்டினண்டிற்கு] வா நீ! யானுரைப்பதுகேள். நின்தசைகள் மீண்டுங் குழந்தைப் பரு

(1) இரண்டகன்=வஞ்சகன். சூதினால் இத்தீவைத் தன்னிடமிருந்து கவர்ந்துகொள்ள வந்திருக்கும் ஓர் ஒற்றன் என்று பர்டினண்டின்மீது குற்றங் கூறியதற்கு இணங்க, அவனை இரண்டகன் என்கின்றான். ஆதலால், அகப்பட்டுக்கொண்ட ஒற்றனுக்குரிய தண்டனையை அவனுக்கு விதிக்கின்றான்.

வித்துக்கள் தொட்டில்கொண்டிருந்த உமி—தானியங்கள் முதிரும்வரையில் உமியினால் மூடப்பெற்றிருப்பதால் அவ்வுமியினை, குழந்தைகள் முதிரும் வரையில் கண்வளர்கின்ற தொட்டில் என்று அழைக்கின்றான்.

(2) ஆகா - அவை என் உணவுகள் ஆகமாட்டா, நான் உடன்படமாட்டேன்—என்பது பொருள்.

(3) மாற்றலன்=பகைவன். எனக்குப் பகைவனாயிருக்கின்ற நீ என்னிலும் ஆற்றல் அதிகம் உடையவன் என்பதை என்னுடன் போர்செய்து நிலைநிறுத்தினாலன்றி நானுனக்கு அடங்கி நத்தையும் வேர்களும் உமியுந் தின்றுகிடக்கமாட்டேன், என்று இகலித் தன் வாளை உருவுகின்றான்.

(4) "நீ இவனை அளவுகடந்து அவசரப்பட்டு இப்படித் தண்டிக்கப்புகுவது தகுதியன்று"—என்கின்றாள். ஆராயாது......சோதிக்கவேண்டா, என்பது, அவன் குற்றத்தை ஆராயாமல் அல்லது அவன் ஆற்றலை ஆராயாமல், என்று இருவிதமாகவும் பொருள்படலாம்.

(5) செம்மல்=மேன்மகன். வெருவந்த செய்யான் - தான் அஞ்சமாட்டான் என்றும் பொருள்படும்; அல்லது மற்றவர் அஞ்சுதற்குரிய தீமைகள் செய்யமாட்டான் என்றும் பொருள்படும். [**வெருவந்த செய்யாமை, என்ற திருக்குறள் அதிகாரத்திற்குப் பரிமேலழகர் இவ்விரு பொருள்களும் கொடுத்திருப்பது காண்க**]. ஆதலால், இவ்வாக்கியம்—(1) வீரம் ஆண்மை அனைய அருங் குணங்களையுடைய மேன்மகன் இவன் எதற்கும் அஞ்சமாட்டான், ஆகையால், அவனை அவனது ஆற்றலை ஆராயாமல் இவ்வளவு சோதிக்கவேண்டா, (2) நீதி வாய்மை அனைய அருங் குணங்களுடைய இம்மேன்மகன் நாம் அஞ்சத்தகும் தீமை ஒன்றுஞ் செய்யமாட்டான், ஆதலால் இவனை வீணே இவ்வண்ணம் சோதித்து வருத்தஞ் செய்யவேண்டா, என்று இரண்டுபொருள்களையும் முதல்நூலிற்போல் இங்கும் ஏற்கும்.

(6) மிராண்டாவை இழித்துரைப்பதுபோல் இப்படிப் பேசுகின்றான். என் காலுக்கு நிகரான நீயா எனக்குப் புத்திசொல்ல வருகின்றாய்—என்பது பொருள்.

(7) ப்ராஸ்ப்பீரோவின் மந்திரத்தால் கட்டுண்டிருக்கின்றானாதலால், ஓங்கிய வாளால் தாக்கமாட்டாமல் நிற்கின்ற பர்டினண்டை ப்ராஸ்ப்பீரோ பரிகசிக்கின்றான். ஒறுத்தல்=அடித்தல்.

(8) நீ வஞ்சனையால் இத்தீவைக் கவர்ந்துகொள்ள வந்திருக்கின்ற குற்றத்தை உன் மனச்சாக்ஷி அறியுமாகையால், ஓங்கிய வாளை உபயோகப்படுத்தயாட்டாமல் உன் மனச்சாக்ஷியே உன்னைத் தடுக்கின்றது.

(9) குச்சி, என்று ப்ராஸ்ப்பீரோ தன் கையிலிருக்கும் மந்திரக் கோலை அலக்ஷியமாகக் குறிக்கின்றான். கட்கம்=வாள்.

(10) பணயம்=ஜாமீன் (surety.)

(11) இன்னொரு வார்த்தை நீ இவனுக்குப் பரிந்து பேசுவாயானால், நானுன்னை வெறுக்கும்படி நேரும். அல்லது உன்னை வைது இவ்விடம் விட்டு அகற்றிவிடுவேன்.

(12) நீ இதுகாறும் காலிபனை மாத்திரந்தான் பார்த்திருக்கின்றாய். அவனைப் பார்த்த கண்களுக்கு இவன்

வத்தை அடைந்துவிட்டன, அவைகளில் வலிமையில்லை.

பர்டினண்ட்:—அவ்வாறே ஆயிற்று. என் உணர்வெல்லாம், கனவிற்போல், கட்டுண்டிருக்கின்றன. என் சிறையிலிருந்து இம்மாதராளைத் தினமொரு முறை காணப்பெறுவேனேல், என் தந்தையை இழந்ததுவும், யான் அடைந்திருக்கின்ற இச் சோர்வும், என் நண்பர்களனைவரும் சிதைந்துபோயதும், என்னை அடக்கிவைத்திருக்கும் இவன் உரப்புகின்ற வன்சொற்களும் எல்லாம் எனக்கு எளிதாகவே தோன்றும் (13). உலகின் மற்றெல்லா மூலைகளையும் விடுதலை தனக்கு உதவியாக்கிக் கொள்ளட்டும்; இத்தகைய சிறைக்கூடத்தில் போதிய இடம் எனக்குளது (14).

ப்ராஸ்ப்பீரோ:—[ஒருபுறமாய்] வேலை செய்கின்றது. 15. [பர்டினண்டிற்கு] வாவா! [ஏரியலுக்கு] நுண்ணிய ஏரியல், நன்றுசெய் தமைத்தனை நீ. [பர்டினண்டிற்கு] வா, என்பின். [ஏரியலுக்கு] இன்னும் எனக்குச் செய்யவேண்டுவது என்னவென்று கேள்.

மிராண்டா:—தன் சொற்களால்தோன்றுவதனினும், ஐய, நற்குணத்தவர் என் தந்தை; இப்பொழுது அவரிடமிருந்து வருமிது இதுகாறும் இருந்திரா அதிசயமாயிருக்கின்றது, (16)

ப்ராஸ்ப்பீரோ:—[ஏரியலுக்கு] மலையின் காற்றைப் போல நீ முழுவதும் விடுதலை யடைந்தவனாவாய் மற்று, என் கட்டளையின் குறிப்பை எல்லாம் நீ செவ்விதின் செய்யவேண்டும். (17)

ஏரியல்:—அசை அசையாக—(18)

ப்ராஸ்ப்பீரோ:—[பர்டினண்டிற்கு] வா, என்பின்—[மிராண்டாவிற்கு] இவனுக்காகப் பேசாதே நீ.

தெய்வலோகத்திலிருந்து வந்தவன்போல் தோன்றுகின்றான்போலும்; இவனைவிட அழகுடையவர் இலரோ! எத்தனையோபேர் இருக்கின்றார்; அவர்களைப் பார்ப்பாயாயின் பிறகு இவன் காலிபன் போலவே குரூபியாய்த் தோன்றுவான். இவனைப் பார்த்த கண்களுக்கு அவர் வானவர்போல் காணப்படுவார்—என்பது பொருள். இது வம்பு வார்த்தை.

(13) மாதராள் = மங்கை. இவளைத் தினம் ஒருமுறையேனும் பார்த்துக்கொண்டிருக்கக்கிடைக்குமாயின், என் தந்தையையும் நண்பர்களையும் இழந்த துயரத்தையும், இவன் (ப்ராஸ்ப்பீரோ) என்னை நலிகின்றதையும், நான் சிறையிலிருப்பதையும் ஒரு பொருளாக எண்ணி வருந்தமாட்டேன்.

(14) சிறை நீங்கிச் சுயேச்சை யடையவேண்டுமென்று ஆசைப்படுபவர் படட்டும்; மிராண்டாவைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு எனக்குச் சிறைக்கூடமே போதும்—என்பது பொருள். இது, பர்டினண்ட் ப்ராஸ்ப்பீரோவைப் பார்த்துச் சொன்னதன்று, தானே சொல்லிக் கொண்டது.

(15) வேலை செய்கின்றது—காதலானது இவனைத் தன்வயமாக்கிக்கொள்கின்றது—என்பதுபொருள்.

(16) இப்பொழுது இவர்காட்டும் வன்மமும் கடுஞ்சொல்லும் என் தந்தைக்கு இயற்கையல்ல. இப்பொழுது தோன்றுவதனினும் நல்லவர் அவர். ஏனோ இவர் இன்று இவ்வாறு செய்கின்றார் என்று திகைக்கின்றேன். இது பற்றி நீ வருந்தவேண்டா, விரைவில் தணிந்துவிடுவார்—என்று மிராண்டா பர்டினண்டைத் தேற்றுகின்றாள்.

(17) விடுதலை வேண்டுகின்ற ஏரியலுக்கு அளித்த உறுதிமொழி யிது. மலைக்காற்று எப்படிச் சுயேச்சையாய்ச் சஞ்சரிக்கின்றதோ அப்படி நீயும் சஞ்சரிக்கலாம்.

(18) அசை அசை ஆக = சிறிதுகூட விடாமற் செய்வேன்—என்பது பொருள்.

முதல் அங்கம் முற்றிற்று.

# தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்.

[391-வது பக்கத் தொடர்ச்சி]

## இறையிலி

எல்லாவற்றிற்குமே தண்டமிழ்த் தேயபரிபாலகர்வரியிறுத்து வசூலிக்கவில்லை. சைவவைணவத் திருக்கோயில்களுக்கு இறையிலாது நிலங்களை விட்டனர். அவைகட்குத் "தேவதானம்" என்று பெயர். சமண பௌத்த கோயில்களுக்கு வரியில்லாது சில பூமிகளை வழங்கிவைத்தனர். அவைகளுக்குப் "பள்ளிச் சந்தம்" என்றுபெயர். பார்ப்பனர்க்குவிடப்பெற்றநிலங்கள் "பிரமதேசம்," "பட்ட விருத்தி" எனவும், தர்ம ஸ்தாபனங்களுக்கு விடப்பெற்றவை "சாலாபோகம்" எனவும், புலவர்க்கு அளிக்கப்பெற்றவை "புலவர் முற்றூட்டு" எனவும் பெயர் பெற்றிருந்தன.

### நித்திய கர்மானுஷ்டானங்கள்

பிரஜானுகூல பார்த்திபர்களின் தினசரிக் கடமைகள் எவ்வாறு நடைபெற்றனவென்பதை நாம் அறிந்து ஆனந்திக்கவேண்டியது அவசியமாகின்றது. அவர்கள் ஒரு தினத்தை முக்கியமாக மூன்று பகுதிகளாப் பிரித்தார்கள். காலை 6மணி முதல் 10 மணி வரையிலுமுள்ள முதற் பகுதியில்வேதாந்தவிசாரணையும் கல்வி யபிவிருத்திக்குரிய சம்பாஷணையும் செய்வர். 10 மணி முதல் பகல் 2மணிவரையிலு முள்ள இரண்டாம் பகுதியில் தானதர்மங்களும் நியாயவிசாரணையும் புரிவர். பகல்2 மணி முதல் மாலை 6 மணி வரையிலுமுள்ள மூன்றும் பகுதியில் நாட்டின் வளப்பங்களையும், குடிகளின் சௌகரியாசௌகரியங்களையும் விசாரித்து அவைகளுக்கேற்ற திட்டங்களைச் செய்வர். அடிக்கடி பிரஜைகளுடன் சம்பாஷித்து உண்மையான குற்றங்குறைகளை நேரில் தெரிந்துகொள்ளுவார்கள். இன்னும் இராக்காலங்களில் மாறுவேடம் புனைந்து நகர்முழுதும் சஞ்சரித்து ஜனங்களின் சஞ்சலங்களை யறிந்து மறுநாளே அவைகளைப்போக்க வழிதேடுவர். இம்முறைகள் தவிர ஒற்றர்கள் மூலமாயும் நாட்டில் நடக்கும் எவ்விதமான சம்பவங்களையும் அவ்வப்பொழுது கண்டுபிடிப்பர்.

கிராமப் பஞ்சாயத்தாரின் விபவஹாரங்களையும் தீர்ப்புக்களையும் செவ்வனே சீர்தூக்கிப் பார்ப்பார்கள். பெரிய கட்டிடங்களை நிர்மாணித்தல், பழைய கட்டிடங்களைப் புதுப்பித்தல், தேவாலயங்களைக்கட்டுதல் போன்ற பொதுக்கட்டிட விஷயங்களையும் முற்கால மும்மன்னர் கவனித்துவந்தனர். போக்குவரவு சாதனங்களையும், வியாபார வசதிகளையும் கவனித்துச் சீர்ப்படுத்துவார்கள். அரசாங்கத்துறை ஒவ்வொன்றிலும் கண்ணோக்கமாயிருந்து தாமதமின்றிச் சீர்செய்யும் சிறப்பாளர்களாய் விளங்கினர்.



### சில தவறுதல்கள்

தண்கதிர் பரப்பி வெண்ணிலவு வீசி உலகம் புகழ ஒளிர்கின்ற சந்திரனுக்கும் ஒரு மறு உண்டன்றோ? மானிடஜன்மத்திற்குரிய ஒரு அற்பக் குற்றமாயினும் இருக்குமன்றோ? சேர சோழ பாண்டி மன்னர் திராக்ஷாரஸம் போன்ற போதையை உண்டாக்கும் பானங்களை அபரிமிதமாய்ப் பருகும் பழக்கமுடையவர். அந்தப்புரத்தில் பட்டமகிஷியைத் தவிரப் பலவேறு அணங்குகளையும் வைத்திருந்தனர். சிலர் ஸ்திரீ லோலர்களாய்த் தன்னிச்சையாய்க் காலங் கடத்தினர். இப்பேர்க்கொத்த அடாச் செயல்களால் அவர்களுக்குச் சற்றே மரியாதை குறைந்த காலமும் உண்டு.

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா? பட்டத்து ராணிக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும் இஷ்டத்து ராணிகளுக்குப் பிறந்த மக்களுக்கும் ராஜ்யாதிகாரவிஷயமாய்ப் பலப்பல பூசல்கள் ஏற்பட்டதுமுண்டு. அங்கங்கே கலவரங்களும் கலகங்களும் உண்டாயின. இவைகளையெல்லாம் ஒருவாறு அடக்கிச் சமாதானம் செய்யும் பொருட்டு மந்திரிகள் மட்டிலாப் பயபக்தியுக்தியூகையுடன் காலாகால மறிந்து வேலைசெய்து நாட்டையும் நாயகனையும் காப்பாற்றினார்கள்.

### முடிவுரை

துர்ச்சகவாசத்தால் ஒருவரல்ல திருவர் தந்நிலைதவறினரே யாயினும் நல்லமைச்சின் வலியால் நாடு சீர்கெடவில்லை. மற்றெல்லா மாட்சிமை தங்கிய ஆட்சியாளர்களும், "நாம் முறைதவறி நடந்தால் நம்மைக் கேட்பவன் யார்? நமக்கு ஈடேது? எதிரேது? ஒப்புவமை யற்ற நமக்கென்ன குறை? நாம் கண்டதே காட்சி கொண்டதே கோலம். நாம் அடித்தது ஆட்டம் பிடித்தது பெண்டு, என்றுகர்வித்தால் துரியோதனதியரைப்போல் குலத்தோடு மடிவோம். ஆகவே அவ்விதம் ஒழுகுதல் ஒருபோதும் ஒவ்வாது. நமக்கு மேல் தெய்வம் ஒன்று இருக்கின்றது. எங்கும் நிறைந்த பராபரவஸ்து ஒன்று இருக்கிறது. அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும். எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும். தெய்வம் பொறுக்கினும் பூமி பொறுக்காது. அண்டமிடிந்து தலைமேல் விழும். ஆகையால் அநீதமென்பது அணுவளவுமாகாது. நெருப்பாறும் மயிர்ப்பாலமுமாக ராஜ்யாதிபத்யத்தைக் கருதவேண்டும். மழையைத் தனக்காதாரமாக நோக்கியிருக்கும் பயிர்போலக்குடிகள் தமக்கு ஆதாரமாக நமது செங்கோலையே நோக்கியிருக்கின்றனர். அச்செங்கோல் கோணினால் எல்லாம் கோணும். ஏழை யழுதகண்ணீர் கூரிய வாளொக்கும்" என்பதை உய்த்துணர்ந்து எல்லாம் வல்ல இறைவன்கீழ் இறைவனாயிருந்து துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்துவந்தனர்.

ஜனங்களும் ராஜாவைத் தந்தையாகவும் ராஜபத்தினியைத்தாயாகவும் பாவித்து அவர்கள் மனங்கோணாமல் நடந்து திருப்திபடுத்திவந்தார்கள். தங்களுடைய தரணியாளரைத் தர்மதேவதையின் அவதாரமென்றே புகழ்ந்து கொண்டாடினர். ஆகவே பிரஜைக்கும் பார்த்திபர்களுக்கும் பரஸ்பரம் விசுவாஸமும் பெருமையும் பேரும் திகழ்ந்திலங்கியதென்று ஒரு முறை சொன்னால் போதாது. பன்முறையும் வாயாரச் சொல்லி மனதாரப் புகழவேண்டும்.

"சோழம் சோறுடைத்து" என்று கூறும்படியான அவ்வளவு நீர்வள நிலவளங்களிற் குறைவில்லாத சோழராஜ்ய மென்ன? "பாண்டி முத்துடைத்து" என்று புகலும்படியான வியாபாரத்திற் சிறந்தோங்கிய பாண்டியராஜ்ய மென்ன? மறுபடியும் "பாண்டி புகழ் உடைத்து" என்று பகரும்படியான தமிழிற் பாண்டித்தியம் பெற்ற பாண்டியராஜ்ய மென்ன? "சேரம் பூஸார முடைத்து" என்று சொல்லும்படியான மழைவளமும் மண்வளமும்பெற்ற சேரராஜ்யமென்ன? பின்னும் "சேரன் பிரேமை யுடைத்து" என்றுமெச்சும்படியான மஹாபக்தசிரோமணிகளைப் பெற்ற கேரள ராஜ்யமென்ன? இம் மூந்நிலங்களின் பண்டைப் பெருமைகளையும், அவைகளை யாண்ட முடியுடை மூவரசர்களையுங் குறித்து இன்னும் விரிவாய்த் தண்டமிழ் வளர்க்கும் இக்"கலாநிலயத்தில்" செந்தமிழ்ப் பெருமொழிப் புலமை பூண்டிலங்கும் இக்"கலாநிலயத்தில்", குமரகுருபரனின்கிருபாநோக்கம் பொருந்திய "குமரையனின்" கரங்களால் வாரத்திற்கோர் மலராய் மலரும் இக்"கலாநிலயத்தில்" படிக்கும் பெரும்பாக்கியத்தைத் தமிழபிமானிகள் பெறுவார்களாக.

தொண்டை மறவேல்

# தமிழ்ப் பாடம் 71.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[390-வது பக்கத் தொடர்ச்சி]

தன்னுடைய முன்வடிவம் பெற்றுநின்ற நளனைத் தேவர்கள்பாராட்டுவதும், கலிபுருடன்தோன்றி அவனுக்கு வரமளிப்பதும் இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கி யிருக்கின்றன.

—

உத்தமரின் மற்றிவனையொப்பாரொருவரிலை[லத்தின்
இத்தலத்திலென்றிமையோரெம்மருங்கும்—கைத்த
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேல்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. 76.

பதப்பிரிவு:—உத்தமரில் மற்று இவனை ஒப்பார் ஒருவர் இலை இ தலத்தில் என்று இமையோர் எ மருங்கும் கை தலத்தின் தேன் மாரி பெய்யும் திரு மலர் தார் வேந்தன் மேல் பூமாரி பெய்தார் புகழ்ந்து.

அன்வயம்:—இமையோர், "உத்தமரில் இவனை ஒப்பார் ஒருவர் இத்தலத்தில் இலை" என்று புகழ்ந்து தேன்மாரி பெய்யும் திருமலர்த்தார்வேந்தன்மேல்எம் மருங்கும் கைத்தலத்தின் பூமாரி பெய்தார். (மற்று—அசை)

பதவுரை.

இமையோர் - தேவர்கள்,
"உத்தமரில் - மேன்மக்களில்
இவனை - இவனை
ஒப்பார் - போன்றவர்

ஒருவர் - ஒருவரும்
இ - இந்த
தலத்தில் - இடத்தில்
இலே - இல்லை''
என்று - என்று
புகழ்ந்து - புகழ்ந்து
தேன் - தேனுகிய
மாரி - மழையை
பெய்யும் - சொரிகின்ற
திரு - அழகிய
மலர் - மலர்களாகிய
தார் - மாலையை அணிந்த
வேந்தன்மேல் - அரசன்மீது,
கைத்தலத்தின் - தம் கைகளால்
எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும்
பூமாரி - மலர் மழையை
பெய்தார் - பொழிந்தார்.

குறிப்புரை:—"இத்தலத்தில் ஒப்பார் ஒருவர் இல்லை'' என்றது, பூலோகத்தில் ஒருவரும் இல்லை என்று பொருள்படுவதோடு, 'இத்தலத்திலும்' என உயர்வுசிறப்பும்மை தொக்கு இருப்பதாகக் கருதினுல் "தேவலோகத்திலுங்கூட இவனைப்போன்ற உத்தமர் இல்லை'' என்றும் அர்த்தம் ஆகலாம்.

——

தேவியிவள் கற்புக்குஞ் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகி லொப்பாயார் போதுவார்—காவலனே[ருன்
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்
முற்றன்பாற் பாரளிப்பான் முன். 77.

பதவுரை.

முற்று - முதிர்ந்த
அன்பால் - அன்பினுல்
பார் - இராஜ்யத்தை
அளிப்பான் - காக்கின்ற நளராஜனுக்கு
முன் - முன்னே, (கலிபுடருண் தோன்றி)
"காவலனே - அரசனே,
தேவி - உன் மனைவியாகிய
இவள் - இந்தத் தமயந்தியின்
கற்புக்கும் - கற்பினுக்கும்,
செங்கோல் - (உன்னுடைய) அரசாட்சியின்
முறைமைக்கும் - நீதிக்கும்
பூ உலகில் - இந்தப் பூமியில்
ஒப்பா - ஒப்பாக
யார் - யாவர்
போதுவார் - வருவார்;
என்பால் - என்னிடத்தில்
வேண்டும் - உனக்கு வேண்டிய
வரம் - வரத்தினை
கேட்டுக்கொள் - கேட்டுப் பெற்றுக்கொள்''
என்றுன் - என்று கூறினுன்.

விரிவுரை:-இவ்வளவு மேன்மை பொருந்திய கணவனையும் மனைவியையும் பிரித்துவைத்துப் பலவாறு வருந்தியதற்குக் கலிபுருடன் கழிவிரக்கங்கொண்டு, அதனிற்கு ஈடு செய்யும்பொருட்டு, நளன் வேண்டிய வரத்தைத் தருவதற்குடன்பட்டு வாக்களிக்கின்றுன். நளனுடைய பெருந்தகைமையை அவன் கேட்கின்ற வரத்திலே சிறக்கக் காணலாம்.

——

உன்சரிதஞ் செல்ல வுலகாளுங் காலத்தும்
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீயடையே லென்றுன் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து. 78.

பதப்பிரிவு:—உன் சரிதம் செல்ல உலகு ஆளும் காலத்தும் மின் சொரியும் வேலாய் மிக விரும்பி என் சரிதம் கேட்டாரை நீ அடையேல் என்றுன் கிளர் மணி பூண் வாள் தானை மன்னன் மதித்து.

அன்வயம்:—கிளர் மணிப்பூண் வாள்தானை மன்னன், மதித்து, "மின் சொரியும் வேலாய், உன்சரிதம் செல்ல உலகு ஆளும் காலத்தும், என் சரிதம் மிகவிரும்பிக் கேட்டாரை, நீ அடையேல்'' என்றுன்.

பதவுரை.

கிளர் - பிரகாசிக்கின்ற
மணி - இரத்தினங்கள் இழைத்த
பூண் - பூண்களையுடைய
வாள் - வாள்களை ஏந்திய
தானை - சைனியத்தையுடைய
மன்னன் - நளராஜன்,
மதித்து - நன்கு ஆலோசித்து,
"மின் - பிரகாசத்தை
சொரியும் - வீசுகின்ற
வேலாய் - வேலாயுதத்தை ஏந்திய கலிபுருடனே,
உன் - உன்னுடைய
சரிதம் - அதிகாரம்
செல்ல - நடக்க
உலகு - உலகத்தை
ஆளும் - நீ ஆள்கின்ற
காலத்தும் - காலத்திலும்
(அதாவது, கலிகாலத்திலுங் கூட)
என் - என்னுடைய
சரிதம் - சரித்திரத்தை
மிக - மிகுதியாக
விரும்பி - விரும்பி
கேட்டாரை - கேட்டவர்களை
நீ - நீ
அடையேல் - (துன்புறுத்தச்) சேராதே''
என்றுன் - என்று கேட்டுக்கொண்டான்.

விரிவுரை:—உத்தமரில் நளனைப்பான் பூவுலகிலும் தேவலோகத்திலும் காண்பது அருமை என்பதற்கு இங்கு இவன் கேட்டுக்கொண்ட வரம் இது ஒன்றே போதும். "இத்துணைத் துன்பம் என்னை நீ செய்தனையே, கலியே, அதற்கெல்லாம் ஈடாக நானும், என் மனைவியும் மக்களும் மற்றெனக்கு உற்றவராயிருப்போரும், வறுமை பிணி மூப்பு இறப்பு என்பன யாவுமின்றி இனிது இருக்குமாறு அருள்வாய்'' எனக் கேட்டிலன் நளன். "புவனம் மூன்றும் என் திகிரி செல்ல வரம் அருள்'' என்றிலன். "என் வழிவரு பின்னையோரும் துன்பத்தைக் காணுவகை பணித்தருள்'' என்றும் கேட்டானல்லன். வள்ளலாகையால் தன்னைப்பற்றி எள்ளளவேனும் நினைக்கவில்லை. பிறருடைய இன்பத்தைக்கண்டு அழுக்காறும்; அவருடைய துன்பத்தைக்கண்டு சந்தோஷமும் அடைவார் அதமர். மற்றவரைப்பற்றி நினையாமல் தம்முடைய இன்பத்தில் திருப்தியும், துன்பத்தில் வருத்தமும் அடைவார் மத்திமர். தம்முடைய சுகதுக்கங்களில் சிந்தனையைப் பெரிது செலுத்தாமல், தாம் இன்புறுவதைப் பிறரும் பெற்று இன்புற வேண்டுமென்ற எண்ணமும், தாமுற்ற துன்பம்போல் பிறர் உறுமல் வாழவேண்டுமென்ற முயற்சியும் உடையவர்களே உத்தமர்களாவார். ஆயின், உத்தமரில் இந் நளனை ஒப்பார் யாருளர்! தனக்குற்ற மாபெருந் துயரம் அன்று நீங்கிற்றே என்ற விடாயும் ஆற்றிக் கொள்ளாமல், "என்னைப் பற்றி இவ்வண்ணம் துன்பம் செய்த இக்கலி, மற்றவரைப் பீடிக்கப் புகுந்தால் என்னதான் பாடுபடுத்தானே'' என்று ஏங்குவதே அவன் முதற் கருத்தாயிற்று. அதுவும், இனி வரும் கலிகாலத்தில் இவனது ஆட்சி பின்னும் வன்மையதாய் இருக்கும். தான் தமர் தன்னினம் தன்னுடு தன்காலம் என்ற வரையறையொன்றும் மெய்யன்புடையோர்க்கு இல்லையாதலால், வேறோர் யுகத்திற்கும் நல்வாழ்வு வாழுமொரு வழியை இன்றே கேட்டு நாட்டுகின்றுன் நளன். நளனுடைய சரித்திரத்தைப் புகழேந்தியின் வாய்வழிக் கேட்டவர், கலையுணர்வு பெற்று எல்லா நலங்களுக்கும் உரியவர் ஆவார் என்பதற்கு ஐயமில்லை. அதுவும் விரும்பிக் கேட்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் நளவெண்பாவைப் பாடமாய் வைக்கின்றுர்களெனினும், மாணவர்களிற் பெரும்பகுதியோர் விரும்பிக் கேட்கின்றதில்லை என்பது உலகறிந்த விடயம். கேட்பாராயின் நளவேந்தன் நமக்காக வாங்கிவைத்திருக்கின்ற வரம் இவ்வளவு வீண்போகாது.

——

என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன்
மின்கா லயில்வேலாய் மெய்யென்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனுன் கலி. 79.

பதப்பிரிவு:—என் காலத்து உன் சரிதம் கேட்டாரை யான் அடையேன் மின் கால் அயில் வேலாய் மெய் என்று நல் காவி மட்டு இறைக்கும் சோலை வளம் நாடன் முன்நின்று கட்டுஉரைத்து போனுன் கலி.

அன்வயம்:—கலி, "மின்கால் அயில் வேலாய்,உன் சரிதம் கேட்டாரை யான் என்காலத்து அடையேன், மெய்'' என்று கட்டுரைத்து, நன் காவி மட்டு இறைக்கும் சோலை வளம்நாடன் முன்நின்று போனுன்.

பதவுரை.

கலி - கலிபுருடனுனவன்,
"மின் - மின்னலைப்போல் பிரகாசத்தை
கால் - வீசுகின்ற
அயில் - கூர்மையையுடைய
வேலாய் - வேலாயுதத்தையுடைய நளனே,
உன் - உன்னுடைய
சரிதம் - சரித்திரத்தை
கேட்டாரை - கேட்டவர்களை
யான் - நான்
என்காலத்து - கலிகால மென்னும் என்னுடைய காலத்திலும்
அடையேன் - சேரேன்.
மெய் - இது நிச்சயம்''
என்று - என்று
கட்டுரைத்து - உறுதியாகக் கூறி
நல் - நல்ல
காவி - நீலோற்பலங்கள்
மட்டு - (தம்மிலிருந்து வழிகின்ற) தேனை
இறைக்கும் - பாய்ச்சுகின்ற
சோலை - சோலைகளினது
வளம் - வளப்பத்தையுடைய
நாடன் - நாட்டையுடைய நளனது
முன்நின்று - எதிரிடத்தை விட்டு நீங்கி
போனுன் - போனுன்.

விரிவுரை:—நளன் வேண்டிய வரத்தைக் கலியும் மகிழ்ந்து அளித்துச் சென்றுன். "என் சரிதம் மிக விரும்பிக் கேட்டாரை அடையேல்'' என்றுன் நளன். கலி, 'மிகவிரும்பி' என்பதைச் சொல்லவில்லையாயினும்,இவனுடைய கருத்தும் அதுவே என்றெண்ண வேண்டும். அல்லது விருப்பமில்லாமற் கேட்டவர்களையுங்கூடச் சிறிது இரக்கத்தோடு நடத்துகின்ற எண்ணம் உடையவனுயிருப்பினும் இருக்கலாம்.

## இலக்கணம்.

ஆகிய என்னும் பண்புருபு இடையே தொக்கு இருக்குமானுல் அந்தத்தொகைகள்எல்லாம்பண்புத் தொகைகள் என்பதைச் சென்றபாடத்தில் செப்பினேம். தன்மை நிறம் வடிவு அளவு சுவை முதலிய பண்பைக் குறிக்கும் பெயர்ச்சொல் நிலைமொழியாகவும், அந்தப் பண்பை உடையதாக இருக்கின்ற பெயர்ச்சொல் வருமொழியாகவும் அமைந்து, அவ்விரண்டிற்கும் உள்ள ஒற்றுமையை விளக்குவதற்கு அவசியமாயிருக்கின்ற ஆகிய என்னும் சொல் இடையே (வெளிப்படையாயில்லாமல்) மறைந்திருக்குமானுல் அத்தொடர் பண்புத்தொகை என்னலாகின்றது. மெய்ம்மொழி, என்றபோது, வருமொழியாகிய மொழியின் தன்மை இன்னதென்பதை மெய் என்னும் நிலைமொழி காட்டுகின்றது.'மெய்யாகிய மொழி' என விரியும். இள அன்னம், முதுமொழி, போன்ற தொடர்களும் இப்படிப்பட்ட பண்புத் தொகைகள்.

கருமேகம், வெண்மல்லி, செந்தாமரை, போன்ற உதாரணங்களில் வருமொழியால் குறிக்கப்பட்ட பொருள்கள் என்ன நிறம் வாய்ந்தன என்பதை நிலைமொழிகள் குறிக்கவும், இடையே ஆகிய என்பது தொக்கு இருக்கவும் காணலாம். இவை, கருமை ஆகிய மேகம், வெண்மை ஆகிய மல்லி, செம்மையாகிய தாமரை என விரியும்.

உருண்டை உலகம், கோணல்வரி,வட்டப்பலகை, சதுரக்கல்;—இவை வடிவுப் பண்புத் தொகைகள்.

கால்பங்கு, நான்மறை, இருகுரவர், சிறுமலை, நெடுவீதி,—இவை அளவுப் பண்புத்தொகைகள்.

உவர்ப்புநீர், கைப்புக்கனி, இன் அமுது, போன்றவை சுவைப் பண்புத் தொகைகள்.

இனி, இவைகளைப்போலல்லாமல் சிறிது வேறுபட்டும் பண்புத் தொகைகள் வரலாம். இவ்வுதாரணங்களில் எல்லாம், நிலைமொழிகள் ஒரு பண்பின் பெயராகவும் வருமொழி அப்பண்பைப் பெற்றிருப்பனவற்றைக் குறிக்கின்ற சொற்களாகவும் அமைந்திருக்கின்றன. அப்படிக்கில்லாமல் இரண்டு மொழிகளும் பொருட்பெயராக விருந்தும் அவைளுக்கிடையே, ஒற்றுமையை விளக்குவதற்கு அவசியமான ஆகிய என்னுஞ் சொல் தொக்கு இருத்தலும் கூடும். வாழைமரம், சாரைப்பாம்பு என்னும் தொடர்கள் விரிந்தால் வாழை ஆகிய மரம், சாரை ஆகிய பாம்பு,

என விரியலாகும். வாழை, சாரை என்னும் நிலைமொழிகள் குணப்பெயர்கள் அல்ல. அவைகளும் பொருட்பெயர்களே. மரம், பாம்பு என்னும் வருமொழிகள் பொதுப் பெயர்கள். பல மரங்களிற் சிறப்பாக ஒரு வகை மரத்தைக் குறிப்பது வாழை. அப்படியே, பல வித பாம்புகளில் சிறப்பாக ஒரு வகையைக் குறிப்பது சாரை. இவ்வாறு வருமொழி பொதுப் பெயராகவும் நிலைமொழி சிறப்புப் பெயராகவும் வருங்காலையிலும் அவை யிரண்டிற்குமுள்ள ஒற்றுமையைக் காட்டுவதற்கு ஆகிய என்னுஞ் சொல் அவசிய மாகின்றது. அச்சொல் மறைந்து இருப்பதால் இவைகளும் பண்புத்தொகைகளே. இப்படிப்பட்ட தொகைகளை இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள் என்று அழைப்பர். சிறப்புப் பெயர் பொதுப்பெயர் ஆகிய இரண்டும் சேர்ந்து வருவதால், இதற்கு இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்னும் பெயர் வந்தது. மாலைப்போது, தமிழ்ப்பாஷை, போன்றன இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள். மாலையாகியபோது, தமிழாகிய பாஷை, என அவை விரியும்:-

'பண்புத் தொகை,' என்ற தொடரே, இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்குநல்ல உதாரணமாகும். இது பண்பு ஆகிய தொகை, என விரியு மாதலால், 'ஆகிய' என்பது தொக்கு இருத்தல்பற்றி அத்தொடர் பண்புத்தொகை. இனி, தொக்குஇருக்கின்ற தொடர்களையெல்லாம் பொதுவாய்க் குறிக்கின்ற' தொகை என்னும் சொல் வருமொழியாயும், அத்தொகைகளில் சிறப்பாகப் பண்பு என்ற ஒன்றைக் குறிப்பது நிலைமொழியாயும் அமைந்திருத்தலால், 'பண்புத்தொகை, என்ற தொடரே இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆயிற்று.

---

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[392-வது பக்கத் தொடர்ச்சி]

ஞ

1150 ஞமலி மயிலு நாயுங் கள்ளும்.
1151 ஞாங்கர் மேலும் பக்கமும் வேலும்
முன்பு மிடமு மொழித லாகும்.
1152 ஞாட்புப் படையும் பூசலுங் கூட்டமும்
பாரமு மெனவே பகர லாகும்.
1153 ஞாழல் துருக்கமு நாகமு மாகும்.
1154 ஞாளி கள்ளு நாயு மாகும்.
1155 ஞான நல்ல தத்துவ நூலும்
அறிவுங் கல்வியு மறைய லாகும்.
1156 ஞெகிழி நெருப்புறு கொள்ளியு நெருப்புஞ்
சிலம்புந் தீப்பொறியுஞ் செப்ப லாகும்.
1157 ஞெண்டு கர்க்கடகமும் ஞெண்டு மாகும்.
1158 ஞெமிர்தல் முறித்தலு முறிதலும் பரப்பும்.
1159 ஞெரேலெனல் விரைவு மொலியு மாகும்.
1160 ஞெள்ளல் வீதியும் மென்மையும் பள்ளமும்
பூசலு மிகுதியு முடன்பாடுஞ் சோர்வும்
ஒலியு மெனவே யுரைக்க லாகும்.
1161 ஞொள்கல் சோம்பு மிளைத்தலு நோயும்
அச்சக் குறிப்பு மறைந்தனர் புலவர்.

த

1162 தகைபீடு மழகு மன்பும் பண்பும்
தகைதலு மியல்பு [1] மிளைப்பு மாகும்.
1163 தகரம் நாற்றமு மயிர்ச்சாந்து மீயமும்
தகரு மெனவே சாற்ற லாகும்.
1164 தகடென்ற லைமையு மிலையு மாகும்.
1165 தகுதி பொறையு மாசாரமு மாகும்.
1166 தகர்மேடமும் யாடும் பூமியுந் தகர்த்தலும்.
1167 தகைமை யியல்பு மழகும் பெருமையும்.
1168 தசும்பு குடமு மிடாவும் பொன்னும்.
1169 தச்சன் தச்சனுஞ் சித்திரையு மாகும்.
1170 தஞ்ச மெளிமையுந் துணையும் பீடும்
பற்றுக் கோடும் பகர லாகும்.
1171 தடைமறு மனைவியுந் தடுத்தலுங் கவசமும்.
1172 தடம் தடக்கரையும் விரிவு மல்குலும்
பொய்கையுந் தடமும் யானைத் தண்டமுங்
கோணலும் விளையும் பெருமையும் பனையும்
மலையு மெனவே வழங்க லாகும்.
1173 தடிசா ரங்கமுந் தண்டு மின்னுந்
தசையு மூடும்பு முலக்கையும் வயலும்.
1174 தட்டலொற் றறுத்தலுந் தடுத்தலுங் கிட்டலும்.
1175 தட்டுத்தேர் நடுவுந் தடுத்தலும் பகுத்தலுந்
திரிகையுந் தட்டும் வட்டமு முட்டுங்
குற்றமும் பரிசையுங் கூற லாகும்.
1176 தட்டை தினைத்தாளும் வேயுந் தீயும்
முண்டமுங் கவணுங் கிளிகடி கோலும்
கரடிகைப் பறையு முண்கலனுஞ் சின்னமும்.
1177 தடாரி மத்தளமும் பறையு மாகும்.
1178 தடறு பத்தனுந் தொண்டையு நாரையும்.
1179 * தடவு தூபக் காலும் பெருமையும்
வளைவு மெனவும் வழுத்த லாகும்.
1180 தண்மை குளிர்ச்சியுந் தாழ்வு மெளிமையும்.
1811 தண்ணங் கட்பறையுமே மழுவுஞ் சாற்றுவர்.
1182 தண்ணுமை [2] முழவு முடுக்கையும் பறையும்.
1183 தணியே மலையுந் தண்மையு மாகும்.
1184 தண்டு குழாயும் வீணையுந் தடியும்
ஓந்தியும் படையு மிதுனமும் [3] வரம்பும்
சிவிகையுந் தண்டமுஞ் செப்ப லாகும்.
1185 தண்டங் குடைக்காலுந் தடியும் படையும்
தண்டித்தலும் யானை [4] சென்ற வழியும்.
வரம்புந் தண்டுஞ் சிவிகையு மாகும்.
1186 தண்ணடை நாடுங் காடு முடுக்கும்
மருத நிலத்தூரு மிலையு மாகும்.
1187 தத்தை முன்பிறந் தாளுங் கிளியும்.
1188 தந்து சாத்திரமு நூலு மாகும்.
1189 தபனன் சூரியனுந் தீயு மாகும்.
1190 தபுதல் கேடுஞ் சாவு மாகும்.
1191 தம்பந் தூணும் பற்றுக் கோடும்
கவசமு மெனவே கழற லாகும்.
1192 தமர மெழுகு மோசையு மாகும்.
1193 தமனிய னயனு மிரணியனு மாகும்.

(பிரதி) 1. பிழைப்பு.

(பிரதி) 2. மழுவு. 3. வாவுஞ். 4. சென்றுற்றழியும்.
* இச்சூத்திரம் சில பிரதிகளில் இல்லை.



1194 தமமே யிருளு மிராகுவு மாகும்.
1195 தமிழ் தமிழ் விகற்பமு நீர்மையு மினிமையும்
தவமுந் தட்பமு நல்லறமு மருளுங்
கருமமு மியல்புங் கழற லாகும்.
1196 தரும ராசன் புத்தனு மருகனுந்
தருமனு மெனவே சாற்ற லாகும்.
1197 தரணி நிலமு மலையு மிரவியும்.
1198 தராவே மதுகமுஞ் சங்கமுஞ் சாற்றும்.
1199 தலந்தா ரணியு மிலையு மாகும்.
1200 தலையா காயமுந் தலைமையுஞ் சிரமும்
இடமு மாதியு மியம்ப லாகும்.
1201 தலையல் மழைவிடுதலும் புதுப்புனல் வரவும்.
1202 தவிசு பீடமுந் தடுக்கு மெத்தையும்
[5] இலகடமும் என்றே யியம்ப லாகும்.
1203 தவாவினை முத்தியு மலையு மாகும்.
1204 தவ்வை மூத்தாளுந் தாயு மூதேவியும்.
1205 தவவு மிகுதலுங் குறைதலு மாகும்.
1206 தழலே நெருப்புங் கிளிகடி கோலும்.
1207 தழை[யே] வளரிளங் கொம்புந் தழையும்
பீலிக் குடையும் பேச லாகும்.
1208 தளம்பொரு படையுஞ் சாந்துந் தாழியும்
நகரும் உப்பரி கையும் பூவிதழும்.
1209 தளிசம ரிடமுந் துளியுங் கோயிலும்.
1210 தளையாண் மயிருஞ் சிலம்பும் விலங்கும்
பிணைத்தலும் பூமுகையு முறுக்குத் தாரும்.
1211 தளிமளம் அழகும் மெத்தையுஞ் சயனமும்.
1212 தன்னை செவிலியுந் தாயு மூத்தாளும்.
1213 தன்மை தமையுடைப் பொருளும் அழகும்
இயல்பு மெனவே யியம்ப லாகும்.
1214 தன முத்திறமும் பொன்னு முலையும்
[6] வருத்தமுஞ் சாந்தும் பசுவின் கன்றும்.
1215 தனஞ்சயன் வாயுவுந் தீயு மருச்சுனனும்.
1216 தன்ன மான்கன்று மற்பமு மாகும்.
1217 தனியொப் பின்மையுந் தமியு மாகும்.
1218 தனுத்தனு ராசியு நுட்பமும் வில்லும்
உடம்பு மெனவே யுரைக்க லாகும்.

தா

1219 தாசி யாளும் பரணி நாளுமாம்.
1220 தாடு தலைமையும் வன்மையு மாகும்.
1221 தாணுத் தூணு நிலைபேறு மலையுஞ்
சங்கரனுங் குற்றியுஞ் சாற்ற லாகும்.
1222 தாண்டவ மாடலுந் தாவலு மாகும்.
1223 தாது பொன்முத லேழு மடிமையும்
தாணிமுத லைந்து மிரதாதி யேழுங்
காவிக் கல்லும் பூவின் றூதும்
மேதியு மெனவே விளம்ப லாகும்.
1224 *தாதை தகப்பனும் பாட்டனு மாகும்.
1225 தாதி யடிமையும் பரணி நாளும்.
1226 தாபரங் கோயிலு முடலு மலையும்
தருவு நிற்பனவும் பூமியு மாகும்.
1227 தாமம் பூவும் மணிவடமும் மலையும்
தந்தியு மூருந் தாருஞ் சாந்தமும்
கயிறுங் கொன்றையு மொழுங்கு மொளியும்
பொருகளமு மிடமும் புகல லாகும்.
1228 தாம்பு கயிறுந் தாமணியு மாகும்.
1229 தாமரை தாமரையும் புலியு மாகும்.
1230 தாய முரிமையுந் தங்குடித் தமரும்.
1231 தாரம் வெள்ளியு நாவும் வில்லுந்
தந்திரி யின்னோ ரிசையுந் தலைவியும்
அரும்பண் டமும்வல் லிசையு மாகும்.
1232 தார்பூவுந் தூசியுஞ் சதங்கையு மொழுங்கும்
மாலையு மாவுநூற் சுற்று மழகும்.
1233 தாரை கண்மணியு முடிவும் வழியுங்
கூர்மையு [7] மழையுஞ் சின்னமுந் தாரமும்.
ஒழுங்கு நேரோட்டமு முரைக்க லாகும்.
1234 தாலந் தரையும் பனையும் நாவும்
வட்டிலு மெனவே வழங்க லாகும்.
1235 தாழை தெங்குந் தாழையு மாகும்.
1236 தாழி கடலுந் தாழியு மாகும்.
1237 தாழ்தல் குறைவும் [8] வணங்கலுந் தங்கலும்.
1238 தாளி பனையுந் தாளிப் புல்லும்.
1239 தாளாண்மை [9] முயற்சியு முஞ்சா கமுமாம்.
1240 தாள்தா[ழ்]ப் பாழும் பாதமு முயற்சியும்.
1241 தாறுமுட் கோலுந் தருவின் குலையும்.
விற்குதையு மெல்லையும் விளம்ப லாகும்.
1242 தானை யாயுதங்களும் படையுந் தூசும்.
1243 தானம் நீராடலுங் கொடுத்தலு முதவியும்
விண்ணு மதமுஞ் சாரிடமும் வேட்டலும்.
1244 தாவென் பதுவே வலியும் வருத்தமும்
கேடுந் தாவெனலும் பகையு மிடையீடும்.

(பிரதி) 5. இலகுமடமும். 6. அருத்தமுஞ்.

* இச்சூத்திரம் சில பிரதிகளில் இல்லை.
(பிரதி) 7. மறையுஞ். 8. வழங்கலுந். 9. மூப்பு.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |




தைலங்கள் :

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக ” | 0-12-0 |
| பிருங்காமலக ” | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஸ்பெஷல் மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் கூந்தல் தைலம்

ஜ்வரேக் ஸோல் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

# ஞான தீபம்

"The possession of knowledge unless accompanied by a manifestation and expression in action, is like hoarding of precious metals.........a vain and futile thing. Knowledge like wealth is intended for use. The law of use is universal; and he who violates it suffers by reason of his conflict with natural forces."

"Man is the maker of life, and his spirit ever proceeds from a lower to a higher perfection."

"A man's understanding of life is the sole force which directs life."

"Where the search for truth begins, there life begins; where the search for truth ceases, there the life ceases."

I

விடாமுயற்சியும் அயர்ச்சியும், உழைப்பும் தளர்ச்சியும், விசுவாசமும் ஐயமும், தைரியமும் அச்சமும், ஏற்றமும் இறக்கமும், அறமும் மறமும், வெப்பமும் தண்மையும், வெற்றியும் தோல்வியும், இன்பமும் துன்பமும், சுகமும் எக்கமும், வாய்மையும் கைதவமும், அழகும் விகாரமும், விதியும் மதியும், மயக்கமும் தெளிவும், தயையும் கொடுமையும், இனிமையும் மூர்க்க சுவபாவமுமான இவைகளால் ஆக்கப்பட்ட வலையாம் வாழ்க்கை என்பது.

சுயத்வத்தைச் சீர்கெடச்செய்து, சமூகப் பழக்க வழக்கங்களுள் ஒடுங்கி, விலங்குகள்போல், ஓடியாடி உண்டுகளித்து இனத்தைப் பெருக்கி, ஓர் நாள், மரணமாகிய அகாதக் குழியில் தள்ளப்பட்டு மறைவது வாணுளின் ஆதர்சமும் மானுடத்வமும் அல்ல. சுயநலப் பெருக்கமோ, அல்லது தியாகசிந்தனை வளர்ச்சியோ, எது ஜீவாதாரமாவது? விரிந்த நோக்கமும், புரைதீர் விவேகமும், சீரிய ஞானமும், அன்புமிக்க உள்ளமும், இனிய சொற்களும், பரஸ்பர ஒற்றுமையையும் நம்பிக்கையையும் செழிப்புடன் பரவச் செய்யும் செயல்களுமே வாழ்க்கையின் உள்ளக்கருத்தாவன, சக்தியின் மெய் யிலக்கணமாவன.

எனினும், அக்கருத்து எளிதில் கைகூடாவண்ணம் தடுப்பவை யாவை? ஆசாபாசங்களின் தீமையையும் இழிவையும் மாந்தரனைவரும் பார்த்துக்கேட்டு அநுபவித்துவந்தபோதிலும், மீட்டு மீட்டும் அவைகளில் உழன்று அல்லல்படுதற்குக் காரணம் என்னையோ? நன்மை தீமை, சுதந்திரம் பந்தம், இச்சாசக்தி ஊழ்வலிமை, என்றவைகளின் பொருளும் குணுதிசயமுமென்னையோ?

இப்பொழுது, பிரகிருதி சாஸ்திரப் பயிற்சியும், பிரகிருதி சாஸ்திர நிபுணர்களின் கோள்களும், ஒவ்வோர் விதத்தில், 'நாகரிக' வாழ்க்கையுள் ஊடுருவிப் பரிணமித்து, தற்காலத்தவர்களுடைய நோக்கங்களையும் போக்குக்களையும் மாற்றிவருகின்றன. இந்தப் பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சிகளின் பயனுன லோகாயத நவநாகரிகத்தின் குணுதிசயங்களென்னை?

புராதன மதங்களும், அறம் மறங்களைப்பற்றிய சித்தாந்தங்களும் அல்லோல கல்லோலப்பட்டு இழிந்தும் அழிந்தும் வருகின்றன! விநாடிதோறும்இன்று பற்பல விஷயங்களைப் பற்றி நூற்றுக்கணக்கான "விவேகி"களும் "ஞானி"களும் எண்ணிறந்த நூல்களையும் உபந்நியாசங்களையும் வழங்கி, கல்விச் சாலைகளை நிறுவி, சங்கங்களை ஸ்தாபித்துவந்தபோதிலும் மௌட்டியமும் மூர்க்கத்தனமும் தற்பொழிவும் கபடமும் வழக்கும் யுத்தமும் எள்ளளவேனும் குறையவில்லை! தூஷித்துத் துறந்து தூரத்தப்பட்டனவெல்லாம் வெவ்வேறு நாமங்களுடன் மாந்தரிடையில் மீண்டும் புகுந்து நிலவிவருகின்றன!

ஊர்ந்து செல்லும் புழுக்களின் சந்ததியாகவும், மிருகங்களின் தோழனுகவும், "பொருத்தமும் பொருளும் பிரயோஜனமு மற்ற சக்தி அணுக்களால்" அலைத்து ஆட்டுவிக்கப்படும் கேவலமானவெறும் பொம்மையாகவும் தாழ்த்தப்பட்டு நிற்கின்றுன் ஆறறிவு பெற்றுள்ள மனிதன். எனின், இவன் நினைப்பன இவை யிவை:—மதவுண்மைகளெல்லாம் மதியிலிகளின் சுயநலப்பேய்ம்மையாற் பிறந்த கற்பனைகளாம்! தத்வ ஆராய்ச்சி வீணர்களின் பொழுதுபோக்காம்! கடவுள், இறைவன், அல்லது ஈஸ்வரன் என்ற பதத்திற்கு அர்த்தமில்லையாம்; அளவளாவி வியாபித்துநிற்கும் விண்ணிலும் ஏனைய இடங்களிலும் தேடித்துருவிப் பார்த்ததில் அக்கடவுள் காணப்படவில்லையாம். பிரகிருதிப் போக்கை நுணுகி ஆராய்கையில், அத்தகைய வஸ்து ஒன்றுக்குச் சிறிதும் அவசியம் இல்லையாம்! நிமிடந்தோறும் மாறுதலுற்று இறுதியில் அழியும்தேகத்தில் மாருததும் அழியாததுமான 'ஆன்மா' 'அந்தர்யாமி' 'அகம்' என்ற ஓர் தனி வஸ்து இல்லையாம்; புலனுணர்ச்சிகளின் தொகுதியுங்கலவையுமே ஆன்மாவாம்! காரண காரிய பலன்கள் என்ற விதிக்குட்பட்ட இவ்வுலகில் சுதந்திரத்திற்குஇடமேயில்லையாம்; வரகவிகள், ஓவியர்கள், தீர்க்கதரிசிகள், வித்தகர்களெல்லாரும் உணர்ச்சியற்ற கோடிக்கணக்கான பரமாணுக்கள் இயங்கிக் கூடிப் பிரிவதின் ஒவ்வோர் விதத் தோற்றங்களாம்; அவர்களுடைய சிந்தனை சொல்செயல்களெல்லாம் அப்பரமாணுக்களுடைய அதிஉக்கிர ஓட்டங்களாயமைந்த சுழற்சிகளின்பலன்களாம்! பலதிற அவயவங்களும் பற்பல வர்ணங்களும் அமையப்பெற்றுப் பல்வேறு ஜீவராசிகள் தோன்றிவருவதில் உட்பொருள் யாதொன்றுமில்லையாம்; அஜ்ஜீவராசிகளின் பலபல தொழில்கள் அனைத்தும் அநித்தியமான இச் சரீரப் பாதுகாப்பின் பொருட்டேயாம்! அக்கினிக் குழம்பினின்று உந்தப்பட்டு வளர்ந்து வியாபித்த பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும், காலக்கிரமத்தில், அவ்வக்கினிக் குழம்பினுள்ளே ஒடுங்கிக் கரைந்துவிடுமாம்! ஜீவ இயக்கங்களின் முடிவும், நானுவித வாழ்க்கையின் கருத்தும் இவையேயாம்.

தோற்றவுலகில், ஸ்பரிசிக்கக் கூடியவைகளாகிக,ண்முன் நிகழ்கின்றவைகளைத்தான் பிரகிருதி சாஸ்திரங்களெல்லாம் ஆராய்கின்றன. அவைகளின்காரணத்தையும் தாரதம்மியங்களையும், உள்ளக் கருத்தையும் அவை ஆராய்வனவல்ல; ஆராய்ந்து அறியக்கூடியனவுமல்ல. கடவுள் ஆன்மா, மனம், அறம், எழில், ஜனன மரணங்களாகிய துல்லிய துரியாதீத வஸ்துக்களின் சூக்ஷுமங்கள் அவ்வாராய்ச்சிகளுக் குட்பட்டனவுமல்ல, உட்படுவனவுமல்ல. அசித் சித்தில் ஒடுங்கியிருப்பதல்லாது, சித் அசித்தில்அடங்கிக்கிடப்பதன்று. கருப்பொருளே துல்லியவஸ்துவே பருப்பொருளாகி ஸ்தூலத் தோற்றங்களாக வெளியாகின்றன. உண்மையில், கருப்பொருள் பருப் பொருளெனவும், சித் அசித்தெனவும், சூக்ஷுமம் ஸ்தூலமெனவும் இருதிற வஸ்துக்களில்லை. ஊன்றி விசாரிப்போமாயின் இவ்வுண்மை தெளிவாகும்.

ஹோமர் - ப்ளேடோ - புத்தர் - பவுல் - வால்மீகி வியாசர் - ஷேக்ஸ்பியர் - திருவள்ளுவர்-கம்பர் முதலாயினேர் ஒழுங்கும் பயனுமற்ற கேவல அணுக்களின் திரண்ட உருவங்களல்லர்; அவர்களுடைய போதனைகளும் கொள்கைகளும் சப்தாணுக்களின் பொருளற்ற ஒலியல்ல; அவர்கள் கைக்கொண்டு இயற்றிய செயல்களெல்லாம் வயிற்றுப் பிழைப்புச் சுகஜீவனத்திற்காக வல்ல.

எல்லாவற்றுள்ளும் இறைந்து, எல்லாவற்றிற்கப்பாலும் ஓங்கி நிற்கும் வஸ்து எனப் பொருள்படுவதான கடவுள் அச்சவுணர்ச்சியால் நிருமித்துத் தொழப்படும் மண்பதுமையன்று; பாலைவனத்தில் தோன்றும் பேய்த்தேர் போன்றதன்று; வனந்தரத்தில் நாவறண்டு தவிக்கு மொருவன்முன் தோன்றி மயக்கியழிக்கும் கானல்நீர் போன்றதன்று.

அறிவிலிகளை உருட்டிப் புரட்டித் துயரத்துள் அழுத்துவதற்காக அமைந்ததன்று மதம். அறிவின்மையை யகற்றி, மூர்க்கத்வத்தை எரித்துத் துயரத்தைத் துடைப்பது மதம். தோற்றப் பொருள்களின் சாரத்தை, அண்டபிண்ட சராசரங்களுள் இறைந்து கிடக்கும் சத்தை உணர்த்துவது மதமாகும். பிராகிருத அமைப்பை யொட்டியவரையில் "மனிதன் ஓர் துரும்புபோன்றவனுலும், உண்மையில், விசாரித்துச் சுயசக்தியை நிர்ணயித்து அறியும் துரும்பு போலும்" எனக் காட்டுவது மதம். மின்ன லிடி மழை அலை புயல்நீர் அனல் பூகம்பம் மிடி நோய்களால் சூழ்ந்துதாக்கப்பட்டுத் துயருற்றுத் துடிக்கும்பேதைகளைத் தைரியப்படுத்தி, அவ்வின்னல்களை எதிர்த்து வென்று, அமைதியும் இன்பமும் பெற்று உய்ய உதவும் பெருஞ் சக்தியாம் மதம். (தொடரும்.)



# திருக்குறள் நீதி

## காமத்துப்பால்— கற்பியல்

[396-வது பக்கத் தொடர்ச்சி]

### 8. பொழுதுகண் டிரங்கல்

1. மணந்தவரைப் பிரிந்தேற்கு
   மாலையேநீ கூற்றேயோ.
2. என்துணைபோல் நின்துணையும்
   வன்கண்ண தோபொழுதே.
3. நடுங்கியநீ காதலர்முன்
   கொடும்பழியேன் கொள்கின்றாய்.
4. காதலர்சென் றால்மாலையிஃ
   தேதிலர்போற் கொல்லவரும்.
5. காலைக்கென் நன்றுசெய்தேன்
   மாலைக்கென் தீங்கிழைத்தேன்.
6. அன்பர்பிரிவால் மாலையிது
   துன்புறுத்து மென்றறியேன்.
7. காலையரும் பாய்வளர்ந்து
   மாலைமலரு மிவ்வொருநோய்.
8. அழல்மாலைக் காயன்தரு
   குழலோசை கொல்லுதடி.
9. மாலைவரும் போதிலிவ்வூர்
   மதிமருண்டு நிற்பரடி.
10. பொருட்குப் பிரிந்தாரையெண்ணி
    வருந்துகின்றேன் மாலையெல்லாம்.

---

### 9. உறுப்பு நலனழிதல்

**தோழி**

1. அழுதழுதுன் கண்ணிரண்டு
   மொளியிழந்து போனதம்மா.
2. பசந்துபனி வாருமுன்கண்
   நயந்தவர்நல் காமைசொல்லும்.
3. மணந்தன்று வீங்கியதோள்
   தணந்தமையின் மெலிவுசொல்லும்.
4. வளைகழல வுன்தோள்கள்
   இளைத்தழகு குன்றியவே.
5. கொடியார் கொடுமையினைக்
   கொண்டுரைக்கும் கைவளைகள்.

**தலைமகள்**

6. வளைகழன்ற தாலவரை
   வன்கண்ண ரென்போமோ.
7. நெஞ்சேயென் தோட்துயரம்
   நீயுரைப்பாய் காதலர்க்கு.

**தோழி — தலைவனுக்கு**

8. தழுவலிழக்கப் பசப்புறுவாள்
   தனியிருக்க வாற்றுவளோ.
9. முயக்கிடைகாற் றாடாடில்
   கயற்கண்ணில் நீர்பெருகும்.
10. ஒண்ணுதலாள் கண்பசப்பை
    யெண்ணியெண்ணி நைந்திடுவாள்.

---

### 10. நெஞ்சொடு கிளத்தல்

1. நினைத்துணர்த் தென்னெஞ்சேநீ மனத்துயருக்
   [கோர்மருந்து.
2. பேதையன்றோ நெஞ்சேநீ காதலற்றார் தமைநயத்தல்.
3. அன்பரிடஞ் செல்லாமல் துன்புறுதல் நன்றாமோ.
4. துன்புறுத்துங் கண்ணைநெஞ்சே அன்பரிடங்
   [கொண்டேகாய்.
5. மறுத்தாலு மன்பரைநாம் வெறுத்திருத்தல்
   [நன்றாமோ.
6. காணவெறுக்காதநெஞ்சேநாணிலையோவங்குச்செல்ல
7. நாணுசை தாங்கநெஞ்சே தோணுதேற் கொன்றைவிடு
8. பிரிந்தார்பின் போந்தநெஞ்சே தெரிந்தறியாப்
   [பேதையன்றோ
9. காதலரென் நெஞ்சிருக்கப் போதலெங்குத் தேடுதற்கு

10. அன்பன்நினை வோடிருந்தால் அழகிழந்து போகும் [நெஞ்சே.

### 11. நிறையழிதல்

1. காமக்கூர் தாலியென்றன்நாணுடைத்ததாலாற்றேன்.
2. காமம்வச மாக்கிநெஞ்சை யாமத்துந் தின்னுதென்னே.
3. தும்மலொத்த தேகாமம் நம்மிலடங்காத தாகுமடி.
4. அடக்கடங்காக் காமமெனை யம்பலத்தில் விட்டுவிடும்.
5. அற்றூர் நிறைகாமம் உற்றவர்க்கோ இல்லையடி.
6. பற்றலர்பாற் சென்றநெஞ்சிற் குற்றதுய ரென்னேடி.
7. பேணியார்க் காளாகி நாணிழந்து விட்டேனடி.
8. பன்மாயக் கள்வன்மொழி யென்நிறையைக் [கொன்றதடி.
9. பிணங்கியபின் ஆற்றேனாய் இணங்கிநான்கலந்தேனடி.
10. இணங்கிப்புணர்ந்தவரைப்பிணங்கமுடியாதெனக்கு.

### 12. அவர்வயின் விதும்பல்

தலைவி

1. சென்றநா ளெண்ணிவிரல் தேய்ந்துகண்ணும் புண் [ணுச்சு.
2. காதலரை யான்மறந்தாற் கட்டழகு நீங்கிவிடும்.
3. உரனுள்ளத் தோடுசென்றார் வரவையெதிர் நோக்கி [யுளேன்.
4. வருவாரெனு நினைவால் வாழ்கின்றேன் சாகாமல்.
5. தோன்றலையென் கண்கண்டாற் றேட்பசப்பு நீங்கி [விடும்.
6. அன்பனைக்கண் டோர்நாளில் துன்பமெல்லாம் [தீர்ந்திடுவேன்.
7. நலக்குரியா ரின்றுவரின் புலப்பேனோ புல்லுவெனோ.

தலைவன்

8. வினைசெல்க மன்னன்யான் மனைகலந்து விருந்துண் [பேன்.
9. வருநாள்வைத் தேங்குபவர்க் கொருநா ளெழுநாளாம்.
10. உள்ள முடைந்துபடின் என்னுலவட் கென்னசுகம்.

### 13. குறிப்பறிவுறுத்தல்

தலைவன்-தோழி

1. சொல்லைமறைத் தாலுமுன்வாய் சொல்வதெல்லாஞ் சொல்லுமுன்கண்
2. பெண்பாலார் யாரினுநின் பேதைபெரும் பேதை [கண்டாய்
3. மணியுள்நூல் போலவள்தன் அணியினுள்ளே திகழ்வ [தென்ன.
4. முகைமொட்டுள் நாற்றமவள் நகைமொக்கு ளொான் [றுகண்டேன்
5. மறுகிமறைத்த கள்ளம் உறுதுயர்க்கு நன்மருந்து.
6. ஆற்றிப் புணர்ந்தவன்றே மாற்றிப்பிரிதலன்பாமோ.
7. கணவர்கருத்தெனக் கென்கைவளைகள்சொல்லுதடி.
8. பிரிந்ததெமைநேற்றுப்பசந்தெழுநாளானதடி[ளுளே
9. தொடிதோளை நோக்கிநொந்து அடிபார்ப்ப தாயி
10. கண்ணி னுலுங்காமங் காட்டாளே பெருந்தகையாள்.

### 14. புணர்ச்சி விதும்பல்

1. காணவெண்ணக் காமவின்பங் கள்ளுக்குமில்லையடி.
2. பனையளவாய்க் காமம்வரின் தினையளவு மூடார்கள்.
3. பேணுது செய்தாலும் காணுதமை யாதென்கண்.
4. ஊடவெண்ணி னேன்மறந்து கூடலுற்ற தேமனமும்.
5. கண்டபோது காதலனைக் காணேனவன் பாற்குற்றம்
6. காணுக்காற் காண்குற்றம் காணுங்கா லில்லையடி..
7. இணங்குவதை விட்டுவிட்டுப் பிணங்குவதா லென்ன [சுகம்
8. களித்தார்க்குக் கள்போலக் கள்வனேநின் மார்பென
9. மலரின்மெலிதாகுங்காமஞ்சிலரேயறிவாரதனை.[க்கு
10. கண்சிவக்க ஊடலானென் காதலியாளல்லளென்றான்

### 15 நெஞ்சொடு புலத்தல்

1. நெஞ்சேயவர் நெஞ்சமெனை மறந்திருக்க நீநினைந் [தாய்.
2. அன்பிலர்பா லென்நெஞ்சே துன்பமுறு ரென்று [சென்றாய்.
3. கெட்டவனென் றெண்ணிநெஞ்சே விட்டவர்பின் [சென்றனையே
4. பிணங்கா திணங்கியநீ பிணங்குநிறம் யாருடனே.
5. பெறுக்காற் றுயரவரைப் பெற்றாலுந் துன்பமடி.
6. அன்பர் பிரிந்தால்மனந் தின்பதுபோற் றுன்பமடி.
7. மறவாமனவசத்தால்மானம்மறந்துவிட்டேன்.[னடி.
8. அன்பர்குறை யெண்ணேனவர் திறனையோ மறவே
9. நெஞ்சந் துணையல்லாமல் தஞ்சமெவ ரென்துயர்க்கு.
10. நெஞ்சந்தஞ்ச மாகாவிடில் தஞ்சம்பிற ராவாரோ.

### 16. புலவி

1. காதலரின் நோயறியப் பிணங்கியிரு சிறுபோது.
2. உப்பமைவு போற்பிணக்கே உதயமாம்புலவிசெய்தல்.
3. புலர்தாள் பிணக்கறுத்துப் புல்லாதேன் இங்குவந்தீர்.
4. ஊடலுண ராக்கொடுமை வாடுங்கொடி வேரறுத்தல்.
5. தலைமிகுந்த பிணக்கேதான் தனக்குப்பேரின்பமென்
6. துனிபுலவி யில்காமம் கனியுங்காயுமாகும் [றார்.
7 ஊடலினுண் டோர்துயரம் கூடல்நீடா தாயினினி.
8. துன்பறியுமன்பரில்லாத் துயரமெவர்க் குரைப்பே
9. நீழல்நீ ரினிதூடல் அழகாகு மன்பருக்கே. [னடி.
10. ஊடலுணங்க விடுவாரைக் கூடுதற்கே அவாவுநெஞ் [சம்.

### 17. புலவிநுணுக்கம்

1. பரத்தைகண்ட மேனிமிச்சில் பற்றிப்புணரேன்யான்
2. ஊடலின்கட் டும்மினர் யான்வாழ்த்தும் மொழி [விழைந்தே.
3. பூச்சூடினுங் மனங்காய்ந்து ஆச்செவட்கோ யோக [மென்பாள்.
4. யாரிலுமுன்மேன் காதலென்றேன் யார்யாரினு மெ [ன்றாளவள்.
5. மறவேனிப் பிறப்பிலென்றேன் மறுமைநினைந் தேய [ழுதாள்.
6. பிரிவில்நினை தேனென்றேன்மறந்ததுண்டோவென் [றழுதாள்.
7. தும்மினேன் வாழ்த்திப்பின் விம்மியெவ ளெண்ணி [யென்றாள்.
8. தும்ம லடக்கினேன் நும்மாள்மறைத் திரென்றாள்.
9. பிணக்கைவி டென்றிரைஞ்சப் பிறரொடும்நீ ரிப் [படியோ
10. திருமேனி நோக்கினேன்தன் உருவோடெவ ளொப் [பென்றாள்.

### 18. ஊடலுவகை

1. தவறவர்பா லில்லெனினுந் தலையளியாற் பிணக்குமு
2. ஊடற் சிறுதுனியும் வாடிப் பெருமைபெறும்.[ண்டு.
3 அன்பரொடு புலத்தலினு மின்பதோ துறக்கந்தான்.
4. நமுவவிடாப் பிணக்கினிடை யொழியுமென்றன் [புலவியெலாம்.
5. விரும்புமக ளீர்பிணக்குக் கீரும்பாகுங் காதலர்க்கு.
6. கூடிப் புணர்தலினு மூடிப் புணர்தலின்பம்.
7. ஊடலிற் றேற்றவென்றி கூடுமவ ரேயுணர்வார்.
8. நுதல்வியர்க்க முயங்கியவள் கதுமெனவே பிண- [கா
9. ஊடுநாள் நின்றிரப்பேன் நீடுகவே யிந்தவிரா.
10. காமத்திற் கின்பூடற் கவ்வூடற்குக் கூடலின்ப




## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:—** அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பிநெல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:—**(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:—**(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:—**(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:—**(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இனைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:—** வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:—**(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:—** அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:—**(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:—**(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:—** உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:—**(E N தணிகாசல முதலியார், B. A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:—**(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஃலாரோ நாடகம்:—** ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:—**(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:—**(Dr. V. S. அருணசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:—**(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:—**(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெனுத் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் ... கையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். ...பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். ...யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

## எமது புதிய பிரசுரங்கள்

### சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜ்வஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

### இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இரஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனாக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

### சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

---

### திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,

**ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு**

ஒன்றே

சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி
(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

### ANCIENT JAFFNA

**Mudaliar C. Rasanayagam** C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

**Rs. 5 8 0 Postage extra.**

KALANILAYAM
**Vellala Street, Purasawalkam, Madras.**

---

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி
### நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ருபா **0-6-0**

### திருக்குறள்

**மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்**
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் [illegible] பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக் [illegible] தும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை [illegible] ர்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலப

விலை அணா **0-12-0**

7. இணங்குவல்
8. களித்தார்க்குக்
9. மலரின்மெலிதாகு
0. கண்சிவந்த ஆடலா

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணா **0-6-0**

[illegible]லா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.




# வர்த்தமானம்

**நெடுவயதுடைய சீனர்:**—லிசிங்யூன் என்னும் ஒரு சீனக்குடியானவர் தமது 256-வது வயதில் மே மாதம் 6-ந் தேதியன்று கியாசின் என்னும் அவர் பிறந்த ஊரில் காலஞ்சென்றார். இவர் 1677-ம் வருடத்தில் பிறந்தவர். இவருக்குப் பல மனைவியர் இருந்தனர்களாம். இவரது கடைசி மனைவி இவரது 156 வது வயதில் இறந்துவிட்டாளாம். இவருக்கு 70 பேரன்மார்கள் இருந்தனர் என்றும், கடைசிப் பேரனின் மகனுக்கு இப்பொழுது 70 வயதென்றும் தெரிகின்றது. இவரை மூன்று ஆண்டுகளுக்கு முன் பத்திரிகை நிருபர் ஒருவர் கண்டு பேசிக்கொண்டிருந்தார் என்றும் அப்பொழுது அவ்வயோதிகர், தாம் ஒரு மூலிகையை உட்கொண்டதால் அவ்வளவு காலம் உயிருடன் இருப்பதாகக்கூறினர் என்றும் தெரிகின்றது. சாகின்றவரையில் அவர் வயல் வேலைகளைக் கவனித்துவந்திருக்கின்றாராம்.

***

**கஷ்டம் வந்தால் கடவுள்:**—அமெரிக்காவில் செல்வம் கொழித்துக்கொண்டிருந்தபொழுது ஒருவரும் கோயில்களுக்குப் போனதில்லையாம். சென்றவொரு ஆண்டாக அமெரிக்காவில் பணக் கஷ்டமும் வேலையில்லாமையும் அதிகரித்துக்கொண்டு வருவதால் வாரத்திற்கு வாரம் கோயில் செல்வோர்களின் தொகை அதிகரித்துவருகின்றதாம். கஷ்டம் வந்த காலத்தில் கடவுள் வேண்டியிருக்கின்றது.

***

**செவ்வாய் உலகச் செய்தி:**—லண்டனிலுள்ள ஸண்டே கிரானிகல் பத்திரிகையின் நிருபர் ஒருவர் செவ்வாயுலக ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள டாக்டர் மான்ஸ்பீல்டு, டாக்டர் ராபின்ஸன், என்னும் இருவரோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் கூறியதை அப்பத்திரிகையில் அவர் அறிவித்துள்ளார்.

டாக்டர் மான்ஸ் பீல்டு கூறுவதாவது:—நான் செவ்வாய் கிரஹவாசிகளுடன் மானஸீகமாகப் பேசியிருக்கின்றேன். அவர்கள் உருவத்தைச்சித்தரித்திருக்கின்றேன். அவர்களது பாஷையைக் கிராமபோனில் எடுத்திருக்கின்றேன். சாதாரண ஸயன்ஸினால் சாதிக்க முடியாததை மானஸீகமாகச் சாதித்துவிடலாம். ஒரு முறை நான் செவ்வாயுலகத்திற்குப் போயுமிருக்கின்றேன்.

அவ்வுலகத்தில் எல்லோரும் உழைப்பாளிகள். பிறர் உழைப்பில் வாழ்பவர்களல்லர். செவ்வாய் வாசிகளில் இரண்டு புருஷர்களும் ஒரு பெண்ணும் ஒரு முறை என்னிடத்திற்கு வந்து பேசிச் சென்றனர். செவ்வாய் உலகவாசிகள் மாமிச உணவு கொள்வதில்லை. அழகான தோற்றமுடையவர்கள். எல்லோரும் மனோசக்தி வாய்ந்தவர்கள். அங்கு நோயே கிடையாது. பூலோகத்திற்குவரும் ஆசையுடையவர்களாயுமிருக்கின்றார்கள்.

டாக்டர் ராபின்ஸன் கூறுவதாவது:—செவ்வாய் உலக வாசிகள் விவசாயத்தையே தொழிலாக உடையவர். அங்கே வியாபாரம் கிடையாது. ஜனங்கள் கிராமங்களில்தான் வசிக்கின்றார்கள். சிறிய நகரங்களும் அங்கிருக்கின்றன. நகரங்களில் அரசாங்க நிர்வாக ஸ்தலங்கள் இருக்கின்றன. கண்காட்சிச் சாலைகளும் நகரங்களில் இருக்கின்றன.

அங்கே வீடுகள் கண்ணாடிகளினால் கட்டப்படுகின்றன. அங்கிருக்கும் மரங்கள் செந்நிறமுடையன.

நான் ஒருமுறை செவ்வாயுலகத்திற்குச் சென்றிருந்தபொழுது ஒருவர் ஓர் ஸைன்ஸ் ஆராய்ச்சிச் சாலையில் இருந்து ஏதோ செய்துகொண்டிருந்தார். அவர்முன் இருந்த யந்திரம் ஆகாசத் தந்தி யந்திரம் போலிருந்தது.

அங்குப் போக்குவரவெல்லாம் மின்சாரத்தால் நடக்கின்றது. பூமிபோல் அங்கு ஆகர்ஷண சக்தி அதிகமாக இல்லை. எனவே செவ்வாய் மனிதர்கள் எல்லோரும் யந்திரங்களின் உதவியினால் சுலபமாய்ப் பறக்கின்றார்கள்.

செவ்வாயிலும் கல்யாண முறையுண்டு. ஒரு அரசன் பல பெரியார்களின் துணைகொண்டு நாட்டை ஆண்டு வருகின்றான்.

செவ்வாய் உலகினர் பூமிக்கு வர முயன்றுகொண்டிருக்கின்றார்கள். சீக்கிரத்தில் வந்து சேர்வார்கள். மானஸீக சக்தியைக் கொண்டு பல அரிய விஷயங்களை நாம் சாதித்துவிடலாம். இச்சக்தி செவ்வாய் உலகினரிடம் அதிகம் இருக்கின்றது. அவர் நம்மினும் அதிகம் உயரமும் அழகும் வாய்ந்தவர். இடகாத்திரர். செந்நிற முடையவர். இன்னும் என் ஆராய்ச்சி முடியவில்லை. முடிந்ததும் ஜனங்கள் வியக்கும் பலவற்றை வெளியிடுவேன்.

***

**மாதர் கடமை:**—ஜெர்மன் தேசத்துச்சர்வாதிகாரியாயிருக்கும் ஹிட்லர் என்பவர் ஜெர்மன் நாட்டு மாதர்களுக்குச் செய்த உபதேசம் வருமாறு:—

பெண்களின் இடம் வீடுதான். இல்லத்தின் அரசிகளாய்ப் பெண்கள் இருந்து வாழ்ந்து, தங்கள் குடும்பத்தாரையும் அவர்கள் வாழ்விக்கவேண்டும். நாஜிக் கட்சியின் கொள்கையும் இதுவே. தொழிற்சாலைகளிலும் உத்தியோகச் சாலைகளிலும் ஆடவருடன் போட்டி போட்டுக்கொண்டு வேலைசெய்வது பெண்மைக் குரியதன்று. இனிப் பெண்கள் பண்டைநிலையை அடையவேண்டும். இது சீர்திருந்தினால் ஜெர்மன் சமுகமும் நாடும் சீர்திருந்திவிடும். இதைச் செய்து வைப்பது ஒரு நல்ல அரசாங்கத்தின் கடமையாகும். மாதர் விடுதலை என்று, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் எழுந்துள இயக்கம் மானுட நன்மைக்காகாது. அவ்வியக்கமே உலகத்திலுள்ள அமைதியின்மைக்குக் காரணம்; வேலையில்லாமை அதிகரித்திருப்பதற்கும் கடவுள் ஞாபகம் இல்லாமல் போனதற்கும் இவ்வியக்கந்தான் காரணம். மாதர் விடுதலை பெறுவது மனையிலேதான். பொருளீட்டும் வேலையில் விடுதலையில்லை. இதை ஜெர்மன்மாதர் கவனிப்பார்களாக.

***

**துணிக்கணக்கு:**—R. W. புரூக் என்பவர் சமீபத்தில் இந்திய நெசவுத்தொழில் விஷயமாய்ச் செய்த ஒரு பிரசங்கத்தில் கூறியதாவது:—கடந்த இரண்டு மூன்று வருடங்களில் இந்தியாவில் நெசவுத்தொழில் மிகவும் முன்னேறியிருக்கின்றது. 1932-33 இல் முடிவுறும் ஒரு வருஷத்தில் இந்தியாவிற்குத் தேவையான ஜவுளியில், இந்தியா 3 கஜமும் ஜப்பானும் லங்காஷையரும் சேர்ந்து 1 கஜமுமாகக் கொடுக்கின்றன. இன்னும் 10 வருட காலத்தில் இந்தியா பிறநாடுகளிலிருந்து ஜவுளி இறக்குமதி செய்வதை நிறுத்திவிடும் என்று நினைக்க இடமிருக்கின்றது.

***

**இன்கம்டாக்ஸ் இலாக்கா அறிக்கை:**—சென்னை இன்கம்டாக்ஸ் இலாக்காதார், இவ்வாண்டு வியாபாரிகள் காட்டிய கணக்குக்கள் ஒழுங்காயிருந்ததென் [illegible] அதனால் இன்கம்டாக்ஸ் உத்தியோகஸ்த[illegible] சிரமமில்லாதிருந்ததென்றும் அறிவித்[illegible] பீஹார் மாகாணத்தி[illegible] 100[illegible] ஸாமில் 100-க்[illegible] ங்காயிருந்[illegible]

Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச்செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணு 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுஞ் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்பு[illegible] இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-0-0. தபால் செலவு வேறு.

கலா நிலயம்
[illegible]பாக்கம், சென்னை.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


[illegible] Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)